# ஸ்ரீ லங்கா



விலை
சதம் 15

மே 1951

மலர் 3 இதழ் 6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| | | பக்கம் |
| 1. | வேடுவலையில் நிதி மந்திரி சொற்பொழிவு | 3 |
| 2. | கூட்டுறவின் பொருள் | 5 |
| 3. | கலைக் காட்சி | 7 |
| 4. | ஆசிரியர்களோடு பேசுதல் | 9 |
| 5. | இக்பாலுக்கு நாம் செலுத்த வேண்டிய கடன் | 11 |
| 6. | மண்டூர் | 12 |
| 7. | நெடுந்தீவு அரசினர் கனிஷ்ட பாடசாலை | 15 |
| 8. | தமிழ் விழா | 16 |
| 9. | யாழ்ப்பாண டிஸ்திறிக்கில் சேமிப்புக் கூட்டம் | 20 |
| 10. | இன்றைய இலங்கை | 22 |
| 11. | வேண்டியளவு அரிசியும் மாவும் | 25 |
| 12. | இங்கினியாகலை—ஓர் துணிகரமுயற்சியின்பிறப்பிடம் | 26 |


## அரசாங்க சமாசாரப் பகுதி வெளியீடு


சிங்களம் ஆங்கிலம்

பள்ளிக்கூடப் புத்தகங்கள், காகிதாதிகள்

**மக்கலம் புத்தகசாலை**

77, நோரிஸ் ரேட், கொழும்பு 11

கொழும்பு 11. ரெலிபோண: 3611

ரயில்வே புத்தகசாலை நிர்வாகஸ்தர்.

ஸ்ரீ லங்காவில்

அன்றும்! இன்றும்!!

அதிக பிரக்யாதி பெற்ற

படம் பிரேம்

போடுபவர்களும்

சகல விதமான கண்ணுடிகள் முகம் பார்க்கும் கண்ணுடிகள் முதலியன பெருந் தொகையாக விற்பனை செய்பவர்களும்

**டி. கே. மத்தியூ**

அன் கோ., லிமிட்டெட்

முதலாம் குறுக்குத் தெரு, குமார வீதி,

மலிபன் வீதி,

கொழும்பு.

ரெலிபோன் 3070 தபாற் பெட்டி 1073

**நவ இலங்கை**

அரசாரங்க சமாச்சாரப்பகுதி

வெளியீடு

விலை -/50 சதம்

இலங்கையைப் பற்றிய

இரத்தினச் சுருக்கம்

(அழகிய அநேக படங்கள் கொண்டது)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

172
Appropriate Technology Services
121, POINT-PEDRO ROAD
NALLUR, JAFFNA
No. 172



# வேருவலையில் நிதி மந்திரி சொற்பொழிவு

**1951-ம் ஆண்டு மார்ச் மாதம் 31-ந் திகதி சனிக்கிழமை வேருவலையில் நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சிக் கூட்டத்தில் கௌரவ. நிதி மந்திரி அவர்கள் நிகழ்த்திய பேச்சு.**

நாம் இலங்கையில் ஸ்திரப்படுத்த விரும்பும் இளம் ஜனநாயக அரசாங்கம் தன்னளவில் திறமை பெற்று நடப்பதற்கு, அது சட்ட அமைப்பாளராக மாத்திரமின்றி தமது வாக்குரிமையைச் செவ்வனே உபயோகிப்பவர்களாயுமுள்ள தெளிந்த அறிவும் பொறுப்புணர்ச்சியும் வாய்ந்த பிரஜைகளை வேண்டி நிற்கின்றது. ஒரு நாட்டின் முழு விவகாரங்களும் அந்நாட்டின் சட்ட நிரூபண சபையில் தங்கியுள்ளதாகவிருக்கும் நமது நாட்டைப் போன்ற சுதந்திர நாடுகளில் வாழும் மக்களாகிய நீங்கள் உங்களுக்கு உபயோகமான ஆக்க வேலைகளை நிறைவேற்றத்தக்க சட்ட அமைப்பாளரை தெரிந்தெடுக்கக் கடமைப் பட்டுள்ளீர்களே யன்றி அநியாய எதிர்ப்பும், முரண்பாடான தடைகளும், குரோதப் பிரசங்கங்களும் மிக மேலான 'தேசிய சேவையை' நிலைநாட்டும் எனக்கருதுபவர்களை ஆதரிக்கக் கடமைப்பட்டுள்ளீர்களல்ல.

கடந்த 3 வருடங்களாக அதிகாரத்திலிருந்து வரும் இந்த அரசாங்கம் அச்சம் அல்லது பாரபட்சம் இன்றி புதுப் புது ஆக்க வேலைகளைப் புகுத்துவதன் மூலம் இந்நாட்டு மக்களின் பொருளாதார நிலைமைகளைச் சீர்திருத்துவதற்காக முயற்சி செய்து வந்துள்ளது. ஆறு வருடத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விவசாய கைத்தொழிலபிவிருத்தி சம்பந்தமான விஷயங்கள் யாவும் அவற்றுக்கென நியமிக்கப்பட்டுள்ள கால அட்டவணைகளின்படி மேற்கொண்டு நடாத்தப்பட்டு வருகின்றன. சர்வதேச விவகாரங்களில் நமது பிரதம மந்திரி அவர்கள் செலுத்தும் கவனமும் பாரிய பிரச்னைகள் சம்பந்தமாக அவருடைய திறந்த மனப்பான்மையும் நமது கௌரவத்தை அதிகரிக்கச் செய்கின்றனவென்பதில் நமக்குச் சந்தேகமேயில்லை.

இவ்வரசாங்கம் இந்நாட்டின் பல்வேறு விவகாரங்களையும் கைக்கொண்டு நடாத்தும் முறைகளை இகழ முடியாது. அவை இகழத்தக்கனவாகவுமில்லை. நாங்கள் செய்யக்கூடியனவும் செய்திருக்கக்கூடாதனவுமான பல காரியங்கள் இருக்கலாம். ஆனால் உலகில் இதர பாகங்களின் நிலைமைகளுடன், குறிப்பாக ஆசிய நாடுகளுடன் இலங்கையின் இன்றைய நிலைமையை ஒப்பிட்டுப் பார்த்தால் நம்மைக் கடினமாக எதிர்ப்பவர்கூட எமது முன்னேற்றம் சிறந்ததென்பதை மறுக்க மாட்டார்.

வாழ்க்கைச் செலவு அதிகரித்துக் கொண்டு போவதனால் ஏற்படும் கண்டனங்களை நாம் தொடர்ந்தும் கேட்க வேண்டியிருக்கிறது. தெற்கு, தென்கிழக்கு ஆசிய நாடுகளுள் மிகக் குறைந்த வாழ்க்கைச் செலவுப் புள்ளிகளை வைத்துக்கொண்டு அதே தருணத்தில் கூடிய சம்பள விகிதத்தைக் கொடுத்து வருபவர்கள் நாங்களே எனக் கூற வேண்டியிருக்கிறது. இந்நாட்டில் நிலவும் சமாதானமும் மக்களின் உறுதி நிலையுமே இவ்வருஞ் சாதனையின் காரணங்கள் என்பதற்கு ஆட்சேபனையில்லை. பொருட்களின் விலைகள் அதிகரிப்பதையிட்ட கண்டனங்கள் அதிகமாகவிருந்த போதிலும் மற்ற நாடுகளைப் போலல்லாது அவைகள் சமாளிக்க முடியாத அளவுக்கு உயர்வதைத் தடுப்பதில் நாம் வெற்றி கொண்டுள்ளோம். நேர்முக, மறைமுக வரி விதிப்புகளால் பொது ஜனங்களிடமிருந்து பணத்தை வசூலித்தமையாலும், சேமிப்பு இயக்கங்கள் மூலமாகவும், இறக்குமதித் தீர்வைகளைக் குறைத்துப் பணத்தைச் செலவு செய்ய வசதியளித்தமையாலும், இறக்குமதி, நாணயப்பரிவர்த்தனைக் கட்டுப்பாடுகளைத் தளர்த்தியமையாலும் இவ்விதம் வெற்றியடைய முடிந்தது.

கடந்த மூன்று வருடங்களிலும் புதிதாக ஏற்படுத்தப்பட்ட, தேசீய முன்னேற்றத்துக்காகவும், சமூக சேவைக்காகவும் செலவு செய்யப்பட்ட பணம் அதனைச் செலுத்தக்கூடியவரான ஒரு சிறு தொகையினரிடமிருந்தே பெறப்பட்டது என்பது பொது ஜனங்களை மகிழ்ச்சியிலாழ்த்தும். இவர்கள் எவ்வளவு பேர் என்பதை நான் ஈண்டு குறிப்பிடுவேன். மாதமொன்றுக்கு 4000 ரூபாவுக்கு குறைந்த வருமானமுள்ள 35,500 பேர் இந்த நிதி வருடத்தில் நேர்முக வரி செலுத்துவதனின்றும் விடுவிக்கப்பட்டனர். தனி நபர்களும், கொம்பனிகளும் உட்பட நிரந்தர வாசிகளும், நிரந்தர வாசிகளல்லாதோருமானவர்களில் இன்று வருமானவரியும் இலாபவரியும் செலுத்துபவர்கள் 28,000 பேராவர். அதாவது முழுக் குடிசனத்தின் ·3 சத வீதமானவர்களாவர். இத்தொகையினரிலும் 1200 பேர் மாத்திரம் வருடமொன்றுக்கு 50,000 ரூபாவுக்கு மேற்பட்ட வருமானமுள்ளவர்கள். மொத்த வருமானமாகிய 130,000,000 ரூபாவில் 67,000,000 ரூபாவை இவர்கள் செலுத்துகின்றனர். அதாவது 50 சத வீதமாகும். முழு வருமானத்தில் 18 சத வீதம் நேர்முக வரிவிதிப்பாக வசூலிக்கப்படுகிறது. நேர்முக வரிகள் திரட்டப்படும் ஆகக் கூடிய வீதம் மதிப்பிடக்கூடிய வருமானத்தில் 66

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சத வீத மென்பது குறிப்பிடத்தக்கது. வருட மொன்றுக்கு 2 லட்சம் ரூபா மதிப்பிடக்கூடிய வருமானத்தையுடைய ஒரு வரி செலுத்துபவர் வருட மொன்றுக்கு வரிகளாக சராசரி 100,000 ரூபா செலுத்துகிறார். இலங்கையில் இன்று இத்தகைய வரி செலுத்துபவர்கள் 24 பேர் மட்டுமே இருக்கின்றனர். இவர்கள் வருடமொன்றுக்கு 39 லட்சம் ரூபாவை வரியாகச் செலுத்துகிறார்கள்.

குறைந்த தொகையினைக் கொண்ட இந்த வகுப்பினரின் வரியை அதிகரிப்பதன் மூலம் நாட்டை ஆளலாமென நினைப்பது முழுவதும் பிழையென்பதை நிரூபிப்பதற்காகவே நான் இந்த புள்ளிகளை எடுத்துக் காட்டினேன். நாம் எப்பக்கத்தையும் சாராது விடயத்தை நன்கு கவனிப்போமானால் அதிக வரியைச் செலுத்தும் மனிதனே அரசாங்கத்துக்குப் பிரதானமானவன் என்பதைக் காண்போம். வரிகளைத் திரட்டும் பொறுப்பு வாய்ந்த மந்திரி என்ற முறையில், அரசாங்க வருமானத்தை அதிகமாக்கும் அம் மனிதர் மேலும் மேலும் செழித்து வாழ்க என்று ஆசி கூறுவேன். ஏனெனில் அவர் எவ்வளவுக்குச் செல்வந்தராக இருக்கிறாரோ அவ்வளவுக்கு அரசாங்க வருமானமும் பெருகும். அவர் மீது சுமத்தப்பட்ட வரி அதிகமாகி விட்டதென்று அவர் கூறுவாரானால், ஆசியாவிலேயே மிகக் கூடியதாக இருந்தபோதிலும், 60 லட்சம் மக்களின் சராசரி வருமானம் மாதமொன்றுக்கு 60 ரூபாவுக்குக் குறைவாகவே இப்பொழுதும் இருந்து வருகிறது என்பதை அவருக்குச் சுட்டிக் காட்டுவேன். அப்பொழுது அவர் அரசாங்கத்தின் பகைவனாக மாறுகிறார்.

அண்மையில் நாம் ஏற்றுமதித் தீர்வையைக் கூட்டிய பொழுது வருட மொன்றுக்கு 10 கோடி ரூபா உபரி வருமானமாகச் சேர்க்க முடிந்தது. ஆனால் தீர்வைப் பொருட்களால் பயனடைந்த அல்லது அவற்றை வைத்திருந்த முழுச் சமூகத்தினரிடமிருந்தும் நேர்முகமான தீர்வை வசூலிக்கப்பட்டது. றப்பர், தென்னை சிறு தோட்டச் சொந்தக் காரர்களில் முறையே 50 சத வீதத்துக்கும் 70 சத வீதத்துக்கும் மேலானவர்கள் மீது அதிக பாரத்தைச் சுமத்தக் கூடாதென்பதிலும் கவனஞ் செலுத்த வேண்டும். கடந்த ஆடி மாதம் தொடக்கம் எங்கள் பொருட்களின் விலைகள் கூடிய காரணமாக அப்பொருட்களின் சொந்தக் காரர்களான இலங்கை மக்களுக்கு ஏறக்குறைய 730,000,000 ரூபா கிடைக்கும்படிசெய்யப்பட்டது. இந்தப் பணம் வரி செலுத்துபவர்களான 27,000 பேர்களுக்குமாத்திரம் அல்லாது இங்குள்ள ஆயிரக்கணக்கான தேயிலை, றப்பர், தென்னை இதர பொருட்கள் ஆதியவற்றை விற்பனை செய்யும் எல்லா வியாபாரிகளுக்கும் கிடைத்தது. இப்பொருட்கள் உண்டு பண்ணப்படும் பகுதிகளில் நாம் பிரயாணஞ் செய்யும் பொழுது அங்குள்ளவர்களின் செழிப்பையும் மகிழ்ச்சியையும் நாம் காண்கின்றோம். இந்த அதிகப்படியான தேசிய செல்வத்தில் 10 கோடி ரூபா புதிய வரிகள் மூலம் குறைந்திருக்கிறது. அதாவது இந் நாட்டுக்கு வரும் மேலதிகப் பணத்தில் $13\frac{1}{2}$ சத வீதமாகும். வரி செலுத்துவோரின் புதிய வருமானங்கள் மதிப்பிடப்பட்டபின்பு அவர்களது வருமானத்திலும் இலாபத்திலுமிருந்து இன்னும் அதிக பணம் அரசாங்க வருமானத்துக்குச் சேரும்.

அரசாங்க விவகாரங்களை, குறிப்பாக தேச வருவாயுடன் சம்பந்தப்பட்ட இவ் விடயங்களை நிர்வகிப்பதற்குக் கவனமும் திறமையும் மிக மிக அத்தியாவசியம். தேசிய செல்வத்தை நேர்முகமாக அதிகரிக்கச் செய்வதற்குரிய கடமைகளை மேற் கொள்ளுவதற்கு வேண்டிய சக்தி பண விஷயத்திலோ, ஏனைய வற்றிலோ அரசாங்கத்தினிடம் இன்று இல்லை யென்பது எனக்கு நன்கு தெரியும். ஆதலால் தான் இவ்வரசாங்கம் தற்பொழுது இங்கிருந்து வரும் பொருளாதாரச் சீரிய மாதிரியைப் பின்பற்றத் தீர்மானித்ததுடன் எமது தேசிய செல்வத்தைப் பெருக்குவதற்காக எடுக்கப்படும் எல்லாப் பிரத்தியேக முயற்சிகளுக்கும் வேண்டிய உற்சாகமளித்து வருகிறது. தேசிய செல்வத்தை விநியோகஞ் செய்வதில் வித்தியாசங்கள் நிரந்தரமாக ஏற்படுவதை நாம் விரும்பவில்லை. அவ்வித்தியாசங்களையிட்டு நாம் கோபித்தாலும், வெறுப்புற்றாலும், நாம் புரட்சிக் குழப்பங்களைவிட்டு கிரமமான முன்னேற்றத்தில் நம்பிக்கை வைப்போமானால், பிரத்தியேக முயற்சிகளால் ஏற்படும் தேசிய அபிவிருத்திக்கு இடையூறு செய்யாது படிப்படியாக வருமானத்தைச் சமமாக்குவதே சமத்துவத்தின் பாதை என்பதையும், உலகில் நன்மையனுபவியாதவர்களாயிருப்போருக்குத் தொழிலும், பணமும் கொடுப்பதற்காகவுள்ள அரசாங்க வேலைகளையும் பிரத்தியேக முயற்சிகளையும் ஆதரித்து வருமானத்தைக் கூட்ட வேண்டுமென்பதையும் அறிதல் வேண்டும்.

எனவே இவ்வரசாங்கத்தின் முழுக் கொள்கையும் சுதந்திரம் கிடைத்தபின் இதன் முழு முயற்சிகளும் தேசிய செல்வத்தைப் பெருகச் செய்வதும் அதனைச் சமமாகப் பங்கீடு செய்வதுமேயாகும் என்பதை நீங்கள் காண்பீர்கள். இந்த வழியில் செல்வதால் மாத்திரம் இச்சுதந்திர ஜன நாயக நாட்டில் வாழும் மக்கள் சமாதானமும் சுபீட்சமுமடைவார்கள்.

---

## பிரதிநிதிகள் சபை ஒத்திவைப்பு

### ஜூன் மாதம் 20-ந் திகதி புதிய கூட்டம் ஆரம்பம்.

ஜனப் பிரதிநிதிகள் சபையை ஒத்தி வைக்கும் பிரகடனத்தை வாசிப்பதோடும் அங்கத்தவர்களை ஜூன் மாதம் 20-ந் திகதி புதன்கிழமை மீண்டும் கூடுமாறு அறிவித்தல் கொடுப்பதோடும் ஜனப் பிரதிநிதிகள் சபையின் நான்காவது கூட்டம் மே மாதம் 1-ந் திகதி முடிவுற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Appropriate Technology Services
121, POINT-PEDRO ROAD
NALLUR, JAFFNA
No.



# கூட்டுறவின் பொருள்

(ஜே. பி. துரைரத்னம்)

கூட்டுறவு என்னும் பதம் பல வேலைகளிலும் ஒத்துழைப்பு அல்லது ஐக்கியம் என்னும் கருத்தில் உபயோகிக்கப் படுவதால், அதன் உண்மைப் பொருளை அறிந்தவர் மிகச் சிலராவர். கூட்டுறவு என்பது ஒரு வியாபார முறை. ஆதியில் மக்கள் தத்தம் உணவையும் உடையையும் தனித்தனியே தேடினர். காலஞ் செல்ல மனுஷ தேவைகள் கூடின. ஆதலால், பண்ட மாற்று முறை ஏற்பட்டது. ஒருவன் ஒரு பொருளைக் கொடுத்துத் தனக்கு வேண்டிய இன்னொரு பொருளைப் பெறலானான். இன்னும் காலஞ் சென்று நாகரீகம் தோன்ற, பண்ட மாற்று முறை கைவிடப்பட்டுக் காசு கொடுத்துப் பொருள் வாங்கும் முறை தோன்றினது. மனுஷன் தனித்து வாழ முடியாதவனாய் பிறரை நம்பி வாழலானான். ஒவ்வொருவனும் ஒரு குறித்த தொழிலில் ஈடுபடலானான். தொழிற்சாலைகளும் முதலாளிமாரும் தோன்றினர். முதலாளிகள் கூலிக்குத் தொழிலாளரை அமர்த்தி அவரின் உழைப்பைக் கொண்டு பெருஞ் செல்வராயினர். இப்பொருளாக்க முறையே முதலாண்மை எனப்படும். மேலைத் தேசத்தில் நடந்த கைத் தொழிற் புரட்சியின் (Industrial Revolution) பேருகவே முதலாண்மை உருப்பெற்றது. இம் முறையின் கீழ் தொழிலாளி தனது சுயாதீனத்தை இழந்து முதலாளியின் அடிமையாய் தொண்டாற்றி வந்தான். இம்முறையை மேற்கொண்டு சமத்துவத்தை நிலைநாட்டும் நோக்கத்துடனே கூட்டுறவு இயக்கம் தோன்றினது.



களுத்துறை, கூட்டுறவு டண்டகசாலைச் சங்கத்தால் நடத்தப்படும் கூட்டுறவு சிற்றுண்டிச்சாலை. நவீன முறைகளில் நடாத்தப்படும் இது இப்பகுதி மக்களுக்கு ஒருவரப்பிரசாதமாக விளங்குகிறது.

இம்முறை முதலாண்மைக்கும் அதற்கு மாருகிய பொதுவுடமைக்கும் நடுப்பட்ட ஒரு முறையாகும். முதலாண்மை தனிப்பட்டவருக்குச் சுயாதீனம் அளித்த பொழுதிலும் செல்வருக்கே பெரிதும் பயன்படுகிறது. பொதுவுடமை வறுமையை நீக்குமெனினும் தனிப்பட்டவருக்குச் சுயாதீனம் கொடுப்பதில்லை. கூட்டுறவு முறை எல்லா வகுப்பினருக்கும் பயன்படுவதோடு தனியாட் சொத்துக்கும் சுயாதீனத்துக்கும் இடங் கொடுக்கிறது.

பொருளாக்கங்கருதி சிலர் தம்மிஷ்டப்படி அமைப்பதே கூட்டுறவுச் சங்கமாகும். இச்சங்கம் குடியரசு முறையில் அங்கத்தவரால் நடத்தப்பட வேண்டும். "உலகுக்கு ஒவ்வொருவர்; ஒவ்வொருவருக்கு உலகு" என்பதே கூட்டுறவின் குறிக்கோள். ஒரு கூட்டுறவுச் சங்கம் கையாள வேண்டிய நான்கு பிரதான கொள்கைகள் வருமாறு:—

### (1) மட்டற்ற அங்கத்துவம்:

அதாவது அங்கத்தவரின் தொகை மட்டுப்படுத்தப்படாதது. ஒரு குறித்த வயதுக்கு மேற்பட்டவரும், நற்குணம் வாய்ந்தவரும், சங்கத் தொழிற் பரப்பில் வசிப்பவரும் அல்லது தொழில் செய்பவரும் வேறெவ்வித தடையுமின்றிச் சங்கத்திற் சேரக்கூடியதாயிருக்க வேண்டும்.

### (2) குடியரசு முறையில் ஆட்சி:

அதாவது பொதுக் கூட்டத்துக்கே முழு அதிகாரமுமுண்டு. கூட்டுப் பங்குக் கழகங்களில் பங்குக் கேற்ற வாக்குரிமை அளிக்கப்படுகிறது. ஆனால் ஒரு கூட்டுறவுச் சங்கத்தில் பங்குகள் எத்தனையாயிருந்த பொழுதிலும் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு வாக்கு மட்டும் அளிக்க உரிமையுண்டு.

### (3) முதல் மீது மட்டான வட்டி:

முதலாண்மைக் கொள்கையில் முதலுக்கு முதலிட முண்டு. கூட்டுறவுச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கத்தில் அட்படியில்லை. கூட்டுறவுச் சட்டத்தின்படி பங்குப் பண மீது கொடுக்கப்படக்கூடிய ஆகக் கூடிய வட்டி வீதம் 6 என்பது ஈண்டு குறிப்பிடற்பாலது.

**(4) ஆதரவுக்கேற்ற இலாப பாகம்:**

அதாவது ஒவ்வொரு அங்கத்தவரும் சங்கத்தைஆதரிக்கு மளவுக்கு இலாடபாகம் பெறுகின்றனர். இது கூட்டுறவு முறையின்ஒரு விசேஷ அம்சமாகும். பங்குப்பணத்துக்கல்ல ஆதரவுக்கே கூடிய மதிப்பு அளிக்கப்படுகின்றது. ஒரு சங்கத்தில் ஒரு ரூபாவுக்கு பங்கு வாங்கிய ஒரு பெண்மணி 90 ரூபா இலாபபாகமாகப் பெற்றது இவ்விடத்திற் கூறற்பாலது.


மேலே தரப்பட்ட நாலு மூலாதாரக் கொள்கைகளைக் கையாளும் கூட்டுறவுச் சங்கம் அங்கத்தவருக்குப் பொருளாக்கம் தேடி நாட்டின் செல்வத்தைப் பெருக்கும்.

**சேதமடைந்த நோட்டுகளை மாற்றிக் கொள்ளல்**

சேதமடைந்த நாணய நோட்டுகளை மாற்றிக் கொள்வதற்கும், புது நோட்டுகளைப் பெறுவதற்கும் செய்யப்படும் விண்ணப்பங்கள் இனிமேல் எனக்கு அனுப்பப்படாமல் பின்வரும் அதிகாரிக்கு அனுப்பப்பட வேண்டுமென்று பொது ஜனங்களுக்கு இத்தால் அறிவித்தல் கொடுக்கப்படுகிறது.

கணக்காளர், கரன்ஸிப் பிரிவு,
பிரதம வங்கி,
செக்கிறிறேறியற் கட்டிடம், கொழும்பு.

எச். ஈ. பீரிஸ்,
திறைசேறியின் பதில் உதவிக் காரியதரிசி
கொழும்பு, 1-5-51.



யாழ்ப்பாணத்திலுள்ள கூட்டுறவு ஆஸ்பத்திரியில் ஒரு குழந்தை பிறந்தவுடன் நிறுக்கப்படுகின்றது. இது கீழ் நாடுகளிலேயே முதன் முதலாக ஆரம்பிக்கப்பட்டுள்ள கூட்டுறவு ஆஸ்பத்திரியென நம்பப்படுகிறது.

1951-ம் ஆண்டு

# இலங்கைக் குடிமதிப்பு

தயவு செய்து திகதிகளை நினைவில் வைத்திருக்கவும்

முதற் குடிமதிப்பு:

**ஜூலை மீ 23-உ தொடக்கம் ஆகஸ்ட் மீ 6-உ வரை**

கடைசிக் குடிமதிப்பு:

**செப்டம்பர் மீ 17-உ திங்கட்கிழமை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் விழா

# கலைக் காட்சி

**தமிழ் விழாவில், தென்னிந்திய, ஈழ சிற்பம், சித்திரம் முதலிய கலைச் சின்னங்களைக் கொண்ட கலைக்காட்சியை, பாதுகாப்பு வெளிநாட்டு விவகாரமந்திரி காரியாலய நிரந்தரக் காரியதரிசி ஸேர். கந்தையா வைத்தியநாதன் அவர்கள் திறந்து வைத்த பொழுது நிகழ்த்திய சொற்பொழிவு.**

தமிழ் அறிவிற் சிறந்த பெரியோர்களே வணக்கம்.

சென்னைத் தமிழ் வளர்ச்சிக் கழகச் சார்பில்நடைபெறும் நான்காவது தமிழ் விழா ஈழநாட்டில் நடைபெறுவது எங்கள் யாவர்க்கும் பெரு மகிழ்ச்சியைத் தருவதொன்றாகும். இவ் விழாவில் கலந்து கொள்ளுவதற்காக இலங்கையின் பல பாகங்களிலிருந்தும், தென்னிந்தியாவிலிருந்தும் தமிழறிஞர்கள் பெருந் திரளாக இங்கே சமுகமளித்திருப்பதைக் கண்டு மகிழ்ச்சியடைகிறேன்.

இவ் விழாவின் ஓர் பகுதியாக அமைந்துள்ள கலைக் காட்சியினைத் திறந்து வைக்கும்படி வரவேற்புக் கழக அங்கத்தவர்கள் என்னைக் கேட்டுக்கொண்டனர். அவர்கள் இட்ட பணியை நிறைவேற்றுவதோடு தமிழ் விழா நிகழ்ச்சிகளை அனுபவிக்கும் சந்தர்ப்பமும் எனக்குக் கிடைத்துள்ளது. இதற்காக வரவேற்புக் கழகத்தாருக்கு எனது மனமார்ந்த நன்றியைச் செலுத்த விரும்புகின்றேன்.

ஒரு நாட்டின் உண்மை இயல்பினையும் அதன் பண்பாட்டின் தன்மையையும் அறியவேண்டுமாயின் அந்நாட்டின் கலைகளை யாம் உற்று நோக்குதல் வேண்டும். தமிழ் மன்னர்களும் தமிழ் மக்களும் நற்கலைகளைப் பேணி வளர்த்தனர். சேர சோழ பாண்டிய மன்னர்களும் நம் ஈழநாட்டு அரசர்களும் கலை வளர்ச்சியில் ஈடுபட்டனர். எனவே அக்காலத்தில் சிற்பம், சித்திரம், இசை, நடனம் முதலிய கலைகள் உச்ச நிலையை அடைந்தன. தென்னிலங்கையிலும் கலை வளர்ச்சிக்குத் தமிழர் ஆற்றிய பெருந் தொண்டு சரித்திர ஆராய்ச்சி முறையால் அறியக் கிடக்கின்றது. பின்னர் தமிழ் நாடு அன்னியர் ஆட்சிக்கு உட்பட்ட காலத்தில் இவை ஓரளவு குன்றத் தலைப்பட்டன. எனினும் மீண்டும் யாம் சுதந்திரத்தைப் பெற்றுவிட்டமையால், தமிழ் நாட்டில் கலைகள் மறுபடியும் அபிவிருத்தியடைந்து வருகின்றன என்பதற்குரிய அறிகுறிகள் காணப்படுகின்றன.

**கலை யென்பது மக்கள் வாழ்க்கைக்குப் புறம்பானதொன்றாகத் தமிழ் மக்கள் கருதவில்லை. இதனாற்றான் இக்கலைகள் இன்றும் உயிரோடிருக்கின்றன.** வீட்டிற் சமையல் செய்வதற்கு வேண்டிய சட்டி, பானை முதலிய மட்கலன்களை ஆதாரமாகக் கொண்டு எவ்வளவு அழகிய வேலைப்பாடுகள் அமைந்த சிற்பங்களை யெல்லாம் தமிழ் மக்கள் செய்து காட்டினர். பின்னர் மரம், கல்லு, கொம்பு, தந்தம் உலோகம் முதலியவற்றின் உதவி கொண்டு சிற்பம், சித்திரம் முதலிய கலைகளை அபிவிருத்தி செய்து வந்தனர். தமிழ் நாடு இசைக் கருவிகளை உருவாக்குதலே ஒரு மாபெரும் தனிக் கலையாக விளங்குகிறது.

**கலையின் உணர்ச்சி மனித சமூகத்தின் வாழ்க்கைப் படியின் ஒவ்வொரு காரியாம்சத்திலும் பிரதி பலிப்பதே சிறந்த நாகரிகத்தின் அறிகுறியாகும். மக்கள் உபயோகிக்கும் ஒவ்வொரு வஸ்துவிலும் கலையின் விசித்திரத்தை அதி விமரிசையாகக் கைக்கொண்டவர்கள் தமிழரே.** கருங்கக்கூறின் வீட்டு முற்றங்களிலே வெவ்வேறு விதமான அழகிய கோலங்களை நம் பெண்மணிகள் சித்திரிக்கும் பழக்கமொன்றே மெச்சத்தக்க சான்று. நாள் தோறும் உபயோகிக்கும் பொருள்களில் தமிழர்கள் தம் கைத்திறனைக் காட்டினர். குத்துவிளக்குகள் என்றால் எத்தனை வகை? பாவை விளக்குகள் என்றால் எத்தனை வகை? குடங்கள் எத்தனை வகை? வெற்றிலைத் தட்டங்கள், பாக்கு வெட்டிகள். உட்காரும் பீடங்கள், புத்தகம் வைக்கும் சிக்குப் பலகைகள், இவை யெல்லாவற்றிலும் அழகிய பதுமைகளைச் செதுக்கியும், சித்திரங்களை வரைந்தும், பல பல நிறங்களைக் கண்குளிரச் சேர்த்தும் உபயோகித்து வந்தனர்.

நமது பெண்மணிகளின் ஆடை ஆபரணங்களின் விதம் விதமான வர்ண சித்திர அலங்காரங்கள் வேறு சாதியாரால் மெச்சி அனுசரிக்கப்படுவதை நீங்கள் அறிவீர்கள்.

**கலைகள் சிற்றின்ப நுகர்ச்சிக்காக அமைந்தனவல்ல என உணர்ந்து வீடு பேற்றிற்கு வாயிலாகப் பயன் படுத்தியவர்கள் தமிழர்கள். ஐம் பொறிகளும் சிற்றின்பத்தில் மூழ்கி விடாமல், இறைவன் திருவடிப் பேரின்பத்தை அடைவதற்குக் கலைகள் உதவிபுரியும் என்பதைத் தமிழ் மக்கள் உணர்ந்தமையாற்றான் இக்கலைகள் தமிழ் நாட்டில் மங்காது உயிர் வாழ்கின்றன.** தமிழரின் வாழ்வுப் பெருமை, திறமையானவற்றை யெல்லாம் கடவுளுக்கு அர்ப்பணம் பண்ணுவதாயே இருந்தது. அதோடு இசைக்கலை, ஓவியக் கலை, சிற்பக் கலை, மருத்துவக் கலை முதலிய எல்லாக் கலைகளும் ஆன்மஞானத்தை வற்புறுத்தும் கருவிகளாயின. இம்மாபெருங் கலைகளில் கடவுளைக் கண்டார்கள். எனவே கோயில் அமைப்பிலும் வழிபாட்டிலும் இக் கலைகள் பயன்படுத்தப்பட்டன. அழகிய கோயில்களையும், கோபுரங்களை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யும், விமானங்களையும், சித்திரம் நிறைந்த மண்டபங்களையும் அழகுற அமைத்தனர். இசையும் நடனமும் கோயில் வழிபாட்டு உறுப்புக்களாகப் பயன்பட்டு வந்தன.

திருக்கோயில்களில் வழிபாட்டுக்குரிய விக்கிரகங்களை அமைத்துதவிய சிற்பிகளின் ஆற்றலை அளவிட முடியுமா? அகில உலகமும் ஒரே முகமாகப் போற்றும் அழகிய நடராசர் திருவுருவத்தை அமைத்த சிற்பியாரோ? அவர் பெயர் மறக்கப்பட்டுவிட்டது. ஆனால் அவர் கலைத் திறன் இன்றும் உயிருடன் இருக்கிறது. இத்தகைய ஸ்தபதிகளை யோகர்களாகவே மதித்துப் போற்ற வேண்டும்.


தமிழெனும் உடலுக்கு சைவம் உயிராய் இருந்த போதும் தமிழும் தமிழரும் பௌத்த, வைஷ்ணவ, முகம்மதிய, கிறீஸ்தவ சமயங்களையும் பேணி வந்தமை உண்மையே. தென்னிலங்கையில் இவ்வுண்மை இன்னும் தெளிவாய் அறியப்படவில்லை. ஒரு காலத்தில் தென்னிந்தியாவிலும், இலங்கையிலும் தமிழர் பெரும் பான்மையாய்ப் பௌத்த மதத்தினராக இருந்தார்கள். அப்போது தமிழரின் கலா சக்தியும் பண்பாடும் பௌத்த மதத்திற்காகவே பயன்படுத்தப்பட்டன. ஆகவே தமிழ்த்தாயை ஆர்வத்தோடு வழிபடுபவர் சாதி சமயப் போரில் ஈடுபடுதல் தவறு. அப்படியே தமிழ்த்தாய்க்குரிய கலைகளும் பொதுப் பாவனைக்குடையன. எனவே இவ்வேளையில் நாம் தமிழ்க் கலை வழங்கும் நாடெல்லாம் கண்ட முடிபு. சுவாமி தாயுமானவர் பாடியுள்ள செய்யுளிற் சொல்லொன்றைச் சிறிது மாற்றவரும்: **"வேறுபடும் கலைகளெல்லாம் புகுந்து பார்க்கின் விளங்கு பரம் பொருளே நின் விளையாட்டல்லால், மாறுபடும் கருத்தில்லை........"**

நம் நாட்டுக் கலைகளை வளர்ப்பதில் நாம் அக்கறை கொள்வோமாக. நம் நாட்டின் கலைகள் மீண்டும் புத்துயிர் பெற்று எழுதலினாலேதான் சுதந்திர உண்மை வெளிப்படையாகும். தற்போது திறக்கப் போகின்ற காட்சிகளைப் போன்றவை எங்கள் உள்ளத்தின் உல்லாச உணர்ச்சியினைப் பிரதிபலித்துக் காட்டக்கூடியவை. இக்காட்சியில் இயன்ற அளவு "தமிழருடையன" என்னும் தனிச் சிறப்புத் தன்மையான பொருட்களையே சேகரித்து ஒழுங்கு செய்திருக்கின்றார்கள். பல காட்சிப் பொருள்கள் கோவில் சம்பந்தமாக இருப்பதும் இயற்கையே.

இவற்றையெல்லாம் கொடுத்துதவிய கோவில் ஆதீன கர்த்தாக்களுக்கும், தமிழ்க் கலா இரசிகர்கட்கும், இவற்றை தேடிப் பிடித்துக் கொணர்ந்து பண்புடன் ஒழுங்கு செய்த, ஓவிய வித்தியா தரிசகர், **திரு. S. R கனகசபை அவர்கட்கும், சென்னையிலிருந்து** அதிக ஊக்கத்துடன் பல காட்சிப் பொருட்களைக் கொணர்ந்த கட்டிடக் கலை நிபுணர் **உயர் திரு. V. M. நரசிம்மன் அவர்கட்கும்,** மற்றும் உதவி புரிந்த எல்லோருக்கும் எங்கள் மனமார்ந்த நன்றி.

தமிழ் நாட்டின் பண்பாட்டை விளக்கும் கலைக் காட்சியினை மிக மகிழ்ச்சியுடன் திறந்து வைக்கிறேன். **இதனை வெறும் காட்சியாகக் கருதாது, தமிழர் கலைத் திறனை உண்மையாக உணரும் சாதனமாகக் கொண்டு தமிழ்க் கலைக்குப் புத்துயிரளிப்பதில் நாங்கள் கரிசனை கொள்வதற்கு வாய்ந்த அரிய சந்தர்ப்பமாகக் கருதும்படி கேட்டுக் கொள்ளுகிறேன்.**

தமிழ்த்தாய் வாழ்க!
தமிழ்க் கலைச் செல்வங்கள் ஓங்கி வளர்க.

# தேச விருத்திக்கு சிக்கன வாழ்வு

"வருவாய்க்குட் கட்டுப்படச் செலவைச் சுருக்காவிட்டால், ஒரு தேசம், வளர்ச்சியும் சுயபலமும் பெற வழியேது? மீஞ்சும் பணத்தைத் திரட்டித் தேசாபிவிருத்தி, நிர்மாண சேவைகட்கு உபயோகித்தாலொழிய, தேசீய செல்வத்தைப் பெருக்கிக் கொள்வதும் இயலாது. தேசீய செல்வத்தைப் பெருக்குவதென்றால், தனவந்தர்கள் கூடிய தனம் பெற்றும், வறியவர் மேலும் வறுமை அடைந்தும் நிலை தளம்புவதில்லை. மகாஜனங்களின் பூரண வாழ்விற்குப் போதுமானளவு, சரிசமனாகப் பொருட் பங்கீடு செய்வதே, தேசீய செல்வத்தைப் பெருக்குவதன் நோக்கமாகும். இந்த லட்சியத்தை நாம் எய்துவதற்கு இன்று சிக்கனமாக வாழ்தல் அவசியம். இதனால் நாளைய ஐஸ்வரியத்தை நாம் ஸ்திரப்படுத்திக் கொள்ளலாம். **உங்கள் வருங்கால சுபீட்சம் மாத்திரமல்ல, உங்கட்குப் பின்வரும் சந்ததியாரின் சுகவாழ்வும் இன்றைய சிக்கன வாழ்விலேயே தங்கியிருக்கிறது."**

—பிரதமர் நேரு—

தேசீய சேமிப்பு இயக்கம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வித்தியா பகுதி

# ஆசிரியர்களோடு பேசுதல்

## டக்டர் எச். டபிள்யு. ஹௌஸ்

### 1. முகவுரை

இலங்கைக் கல்வி இயன்றளவு சிறந்ததாக இருக்கவேண்டு மெனச் சகலரும் விரும்புகின்றனர். இத்தகைய விருப்பம் சகலரிதயத்திலும் எழுந்துள்ள இத்தருணத்தில் நீங்களும் நானும் இலங்கையில் இருத்தல்பற்றி மகிழ்வுற வேண்டும். இறந்த காலத்தை நினைவுகூர்வதிற் பயனின்மையால், எதிர்காலத்தை நோக்குவோம். இலங்கைக் கல்விமுறை மிகத் தெளிவாக வரையறுக்கப்பட்டுளது. அது தொடர்பிலுள்ள ("வெள்ளைப் பத்திரம்" என்றழைக்கப்படும்) "அரசினர் ஆலோசனைகள்" பிரசுரிக்கப்பட்ட தினத்தை ஒரு "பெரு நாளாக" நாங்கள் பிற்காலத்திற் கொண்டாடுவோம். கல்விச்சட்டத்தை மாற்றியமைக்கும் திருத்தச் சட்டமாகவே இத்திட்டம் அமைந்துள்ளது. இதைப் பலிப்புடையதாக நடைமுறையில் வைத்தற்கு அரசாங்கமும், நீங்களும், நானும் ஒத்துழைக்க வேண்டும். கல்வியின் பல்வேறு அம்சங்களையும் பற்றி நான் உங்களோடு பேசுவதற்குச் சந்தர்ப்பங்களை உண்டாக்கிக் கொள்ளுதல், உங்கள் மகத்தான கடமையில் உங்களுக்கு நான் உதவி புரிவதற்கு உதவியாகவிருக்கும்.

ஆகையால், தொடர்புறு பேச்சுக்கள் சிலவற்றை எனது ஆசிரிய நண்பர்களுக்குப் பத்திரவாயிலாக வெளியிடத் துணிந்துள்ளேன். நான் இம்முறையில் ஆசிரியர்களோடு பேசுவதைக் கௌரவ கல்வி மந்திரி அவர்களும் விரும்புகின்றனர். இப் பேச்சுக்கள் படிப்பித்தல் முறைகள் சம்பந்தமானவை; நானும் நீங்களும் சாதாரணமாகச் சந்தித்துக்கதைப்பது போலத் தயாரிக்கப்பட்டவை. உங்களிலும் உங்கள் நாளாந்தக் கடமைகளிலும் நான் கரிசனையுடையேன் என்பதை நீங்கள் நாளடைவில் உணருவீர்கள் என நம்புகிறேன். மேலும், நாங்கள் ஒருங்கு சேர்ந்து உழைக்கவேண்டு மென்பதையும், இலங்கைச் சிறுவனின் நன்மையில் கண்ணுங் கருத்துமாயிருக்க வேண்டு மென்பதையும் நீங்கள் மறக்கலாகாது. இவற்றை நீங்கள் மறந்தால், வெள்ளைப் பத்திரங்கள், திருத்தச் சட்டங்கள் ஆதியன பயனற்ற வெற்றுத் தாள்களாகவே யிருக்கும். இலங்கைச் சிறுவனுக்குப் புரிய வேண்டிய கடமையை நாங்கள் அலட்சியஞ் செய்யலாகாது.

நான் என்ன விஷயங்கள் பற்றிப் பேசப் போகிறேன் என்றறிய விரும்புவீர்கள். பாடசாலைத் தரம், பாடசாலை அமைப்பு, பாடஒழுங்கு, நேரசூசி, படிப்பிக்கும் முறைகள், தொழிற் கல்வி, மொழி கற்பித்தல் போன்ற விஷயங்கள் பற்றியும், ஆர்வம், அவதானம், ஒழுக்கம் போன்றவை பற்றியும் கட்டாயம் பேசுவேனென்று உங்களுக்குத் தெரியும். "இவை அனைத்தும் எங்களுக்குத் தெரிந்தவைதானே. இவருடைய பேச்சுக்களில் புதிதாக எதுவுமில்லை" என்று ஆசிரியர்கள் கூறுவதை நான் செதியிற் கேள்விப்படுவேன். நான் பேசும் விஷயங்களை அநேகர் அறிந்திருக்கலாம். இருந்தும், அறிந்தவற்றை ஞாபகப் படுத்திக் கொள்ளச் சிலர் விரும்புவார்கள்; வேறு சிலருக்கு இவ்விஷயங்கள் ஓரளவிற்கு உதவியாயிருப்பதுமன்றி, உற்சாகத்தையும் அளிக்கும். மேலும், நீங்கள் கேட்கக்கூடிய முறையில் நான் நினைக்கவேண்டு மென்று பெரும்பாலானோர் விரும்புவீர்கள்.

இன்றையிற் பேச்சு முகவுரையாக இருந்தபோதும், இப்பொழுது ஒரு விஷயம் பற்றிச் சிலவற்றைக் கூற விரும்புகிறேன். பேசிக்கொண்டிருக்கும் நானே இவ்விஷயமாகும். நான் உங்களோடு எத்தகைய தொடர்புடையேன் என்பதை நீங்கள் அறிந்து கொள்ள வேண்டும். எனது தோற்றத்தை நான் விவரிக்கவேண்டியதில்லை. புதினப் பத்திரிகைகளில் என்னைப் பரிகாசப் படங்களில் அமைத்திருக்கின்றனர். எனது கடமைகளைப்பற்றி நான் உங்களுக்கு எடுத்துக் கூறுதல் முக்கியம். என்னுடைய கடமைகளைச் செய்வதற்குப் பரிபாலனம் தொடர்பான அறிவு மாத்திரமின்றி பாடசாலை வகுப்பில் நாளாந்தம் நடைபெறும் கருமங்கள் தொடர்பான அறிவும் வேண்டியிருக்கும். வெவ்வேறு தரத்தனவாகிய வகுப்புகளிற் படிப்பித்தே இவ்வறிவைக் கிரகித்துக் கொள்ளலாம். கல்விக் கொள்கைகளை நிச்சயிக்கும் அதிகாரம், பிரதிநிதி ஆட்சிமுறையான அரசாங்கத்தில், வித்தியாதிபதியாகக் கடமை புரியும் என்னைச் சார்ந்ததன்று. நிச்சயித்த கல்விக் கொள்கைகளை, மந்திரி காரியாலயத்தின் கட்டளைப்படி, வித்தியா பகுதி மூலம் நடைமுறைக்குக் கொண்டுவரும் உத்தரவாதம் மாத்திரம் என்னைச் சார்ந்ததாகும்.

நற்பயனைத் தரக்கூடிய முறையில் கல்விக் கொள்கைகளை நடைமுறையில் வைத்தற்கு, ஆசிரியர்களதும் கல்வி தொடர்பாகவுள்ள ஏனையோரதும் சிநேகமும் ஒத்துழைப்பும் பெரிதும் வேண்டியன. மேலும், நாங்கள் என்ன செய்கின்றோம் என்பதைப் பெற்றோருக்கும் பொது ஜனங்களுக்கும் நான் தெரிவிக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரிபாலனக் கடமைகளோ எண்ணிறந்தன. அவற்றிலிருந்து தப்பிக் கொள்வதென்றால் இலகுவான காரியமல்ல. எனினும், பாடசாலைப் பிள்ளைக்கான ஏற்பாடுகளை நான் சிறந்த முறையிற் செய்வதை அவை பாதிக்காமலும் பார்த்துக் கொள்ளவேண்டும். எனது முயற்சிகள் சகலவற்றினதும் இறுதிப் பயனை அடைவேன் என்று நான் எதிர்பார்க்கவில்லை. கல்வித் துறையில் ஈடுபட்ட சகலருடைய அநுபவமும் இதுவே. நீங்கள் அநேக வருடங்களாகக் கல்வி யூட்டிய குறித்த ஒரு மாணவனுடைய இறுதிப் பேற்றைப் பெரும்பாலும் பார்க்க இயலாதவர்களாக இருக்கிறீர்கள்.

பிள்ளைகள் படித்தற்கும் ஏனைய கருமங்களைச் செய்தற்கும் ஏற்ற முறையில் பாடசாலைகளை அமைத்து, அவற்றிற்கு வேண்டிய தளபாடங்களை அளித்தல் எனது கடமை என்று நான் எடுத்துக் கூற வேண்டியதில்லை. பாடப் புத்தகங்கள் வகுப்புகளுக்கு ஏற்றனவாயும் நன்கு அச்சிடப்பெற்றனவாயுமிருக்கவேண்டும். பாடசாலைத் தளபாடங்கள் பிள்ளைகள் நிமிர்ந்து முறையாக இருத்தற்கு ஏற்றனவாகத் தயாரிக்கப்பட வேண்டும். ஒரு பிள்ளை தனிப்பட்டவரையிலும், சமூகத்தோடு தொடர்புபட்ட வரையிலும் சிறந்தவனாக வளர்தற்குத் தேவையான சகல வசதிகளையும் இயன்றளவுக்கு அவனுக்கு அளிப்பதே எனது நோக்கமாகும். நான் விரும்பும் அனைத்தையும் செய்து முடித்தற்கு வித்தியா பகுதிக்கென ஒதுக்கப்பட்ட பணம் போதாமலிருக்கலாம். எனினும், எனது இலக்கு இன்னதென்பதை நான் மறக்க முடியாது; மேலும், ஒதுக்கப்பட்ட பணத்தையும் சிறந்த முறையில் நான் உபயோகிக்க வேண்டும். பாடப் புத்தகங்கள் தொடர்பில் பாடநூற் பிரசுரச் சபை போதிய உதவி புரியும். நானே அச்சபைக்குத் தலைவராக இருக்கின்றேன். பாடசாலைகளுக்கு மிகப் பொருத்தமானவை யெனக் கருதும் மாதிரித் தளபாடங்களைப் பெற்றுப் பரிசீலனை செய்கிறேன்.

ஆசிரிய சேவைக்குத் தெரிந்தெடுத்தல் தொடர்பிலும் நான் ஆலோசனை செய்து, திட்டம் வரைய வேண்டியிருக்கின்றது. ஓர் ஆண் அல்லது பெண் ஆசிரிய சேவையைச் சேர்ந்து பாடசாலையிற் படிப்பிக்கும் பொழுது, அவ்வாணுக்கு அல்லது பெண்ணுக்கு நியாயமானளவு சுவாதீனத்தைக் கொடுத்தற்கு ஏற்ற ஒழுங்கு செய்யும் கடமையும் என்னைப் பொறுத்ததாகும். நியமனம், உயர்ச்சி, மாற்றம் ஆகியவை சம்பந்தமான அலுவல்களைத்தான் செய்வதில்லை; ஆனால் இவற்றைப் பற்றிய கொள்கைகள் தொடர்பில் நான் நடவடிக்கை எடுப்பதுண்டு. வித்தியா பகுதியின் சகல கருமங்களிலும் இவையே கூடிய கஷ்டத்தை (விசேஷமாக, பிள்ளையின் நன்மை ஆசிரியரின் நன்மையைக் காட்டிலும் முக்கியமானதெனக் கருதும் பொழுது) கொடுப்பன. ஆசிரியர் போலவே, வித்தியாதிபதியும் பிள்ளைகளுக்குப் பெற்றார் என்ற முறையில் அமைந்துள்ளார்: எனவே, ஆசிரியரைத் திறமையுடன் கடமை புரியச் செய்தற்கும், அவர்களின் நடத்தையில் அல்லது கடமைகளில் பாரதூரமான தவறுகள் ஏற்படும்பொழுது ஏற்ற நடவடிக்கை எடுத்தற்கும் கட்டுப்பாடுகளும் ஒழுக்க விதிகளும் வேண்டும். கென்ற் என்ற இடத்தில் வித்தியாதிகாரியாகத் தற்பொழுது கடமை புரிபவர் எனது நண்பர். இத்தொடர்பில் அவர் பின்வருமாறு கூறுகின்றார்:—

“உண்மையான முறையில் கல்வி பயிற்றுதற்கு முக்கியமான அம்சங்களாகிய சிரத்தையையும் ஊக்கத்தையும் எழச் செய்தற்குக் கட்டுப்பாடுகளும், ஒழுக்கவிதிகளும், திட்டங்களும் பிரயோசனப்படா. ஏனெனில், சிரத்தையும் ஊக்கமும் காத்திராத இடங்களில் தோற்றி எதிர்பாராத நன்மைகளை அளிக்கின்றன; கட்டுப்பாடுகளையும் விதிகளையும் அடிப்படையாகக் கொண்டு படிப்படியாக அமைக்கப்பட்டு வரும் கல்வித் திட்டம் முக்கியமானதாக இருந்த போதும், இயற்கையாகவே ஆசிரியர்களிடத்தும் மாணவர்களிடத்தும் பிறக்கும் ஆர்வம் முதலியவை காரணமாக வளர்ந்துவரும் கல்வி முறையே விரும்பத்தக்கது.”

கல்வித் துறையிலுள்ள சகல அம்சங்களையும் பொது நோக்காகப் பார்க்க வேண்டியதே எனது கடமையாயிருந்த பொழுதும், பரிபாலனம் தொடர்பிலுள்ள எண்ணிறந்த விவரங்களை நான் கவனியாது விடமுடியாது. பாராளுமன்ற அங்கத்தவர்கள், ஆசிரியர்கள், மதஸ்தாபனங்களின் பிரதிநிதிகள், பெற்றார்—ஆசிரியர் சங்க அங்கத்தவர்கள் ஆதியோர் என்னைச் சந்தித்துக் கல்வி சம்பந்தமாக அவர்களுக்கு ஏற்பட்ட கஷ்டங்களை என்னோடு கலந்தாலோசிக்க விரும்புவர். கந்தோர் நேரமல்லாத மற்றைய நேரங்களில் நான் கூட்டங்களிலும் பாடசாலை விழாக்கள் ஆதியனவற்றிலும் சமுகமளிக்க நேரிடும். உங்களுடைய பாடசாலையை நான் தரிசிக்காததற்குக் காரணம் என்னவென உங்களிற் சிலர் கேட்கலாம்; சிலர் நான் வரமறுத்ததையிட்டுச் சிலவேளை வருத்தப்படலாம். உண்மையாக, நான் பாடசாலைகளை அடிக்கடி தரிசித்துக்கொண்டே வருகிறேன். எனினும் நான் தரிசிக்க விரும்பும் எல்லாப் பாடசாலைகளையும் என்னால் தரிசிக்க இயலாது. உங்களையும் உங்கள் பாடசாலைகளையும் பார்க்க ஆவலுள்ளவனாக இருக்கிறேன். ஆனால், 6500 பாடசாலைகளை ஒருவர் தரிசிப்பது இலகுவான காரியமல்ல.

எனது கடமைகள் பலதுறைப்பட்டனவென்றும், அவற்றை முறையாகச் செய்து முடித்தற்குத் தெளிவான சிந்தை மாத்திரமன்றிக் காத்திரமான சரீரமும் வேண்டுமென்று இதற்கு

(15-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இக்பாலுக்கு நாம் செலுத்த வேண்டிய கடன்

கொழும்பு ஸாஹிராக் கல்லூரி, இக்பால் கழகத்தின் அக்கிராசனர் ஜனுப் ஏ. எம். ஏ. அஸீஸ் அவர்களால் 1951-ம் ஆண்டு ஏப்ரில் மாதம் 20-ந் திகதி, ரேடியோ சிலோனில் ஒலிபரப்பப்பட்ட பிரசங்கம்.

**இன்றைக்குப் பதின்மூன்று ஆண்டுகளுக்கு முன் ஏப்ரில் மாதம் 21-ந் திகதி இக்பால் காலமானுர். ஆனுல் அவரது செல்வாக்கு முஸ்லிம் உலகம் முழுவதிலும் வாழ்ந்து, நாளுக்கு நாள், வருடத்துக்கு வருடம் வளர்ந்தோங்கி வருகின்றது. முஸ்லிம் உலகின் பிரதிநிதிகள் சமீபத்தில் கராச்சியிலுள்ள மொத்தம்மர் என்னுமிடத்தில் கூடியபோது அவர் யாத்த தாரனு—இ—மில்லி என்னும் கவிதையின் அராபிய மொழி பெயர்ப்பை ஆநந்த பரவசத்துடன் கேட்டின்புற்றுர்கள்.**

**"சீனுவும் அராபியாவும் எமதே: இந்தியாவும் எமதே—
நாங்கள் முஸ்லிம்கள் எனவே அகில உலகமும் எமது ஜன்ம பூமியே"**

இப்பிரதிநிதிகளுடன் சுமார் பத்தாயிரம் மக்கள் சமுகமளித்திருந்தார்கள். இவர்களனைவர்களதும் முகங்கள், இப்பாடலினுல் இவர்கள் உர்சாக மடைந்தார்களென்பதைத் தெளிவாக விளங்கப்படுத்தின. ஆகவே இக்பால் காலகதியடைந்த போதிலும் வாழ்ந்தே வருகிருர்; இதை முஸ்லிம் உலகின் ஒவ்வொரு பகுதியும் அதிக மதிகம் உணர்ந்துவருகிறது. துருக்கி, இஸ்லாமிய வாழ்க்கை முறையில் அதற்கு ஏற்பட்டுள்ள புதிய உற்சாகத்துடன், அவரைத் தனது உத்தம புத்திரரான ஜலாலுத்தீன் ரூமியின் வழித் தோன்றலெனவும் சட்ட பூர்வமான வாரிசெனவும் பெருமையுடன் கூறிக் கொள்ளுகின்றது. ரூமி தான் குரு, இக்பால் அவரது சீடர், அதிலும் குருவை மிஞ்சிய சீடர். ஈரான் அவரைத் தனது பாஷையின் சூடாமணியென்றும் இன்னிசைச் செய்யுள்களை யாத்த ஒப்பற்ற புலவரென்றும் பெருமை பாராட்டுகிறது. தேசாபிமானத்தை மக்கள் உள்ளங்களில் சுடர் விட்டெரியச் செய்த அவரது பாக்களையும் சுதந்திரத்தில் இவருக்கிருந்த எல்லையற்ற அன்பினையும் ஆவேசத்தையும் இந்தியா இன்னும் ஞாபகத்தில் வைத்திருக்கிறது. இவரது மனதிற்றுன் பாகிஸ்தான் முதன் முதல் உருவெடுத்த தென்பதை ஞாபகத்தில் வைத்துக்கொண்டு ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு வருடமும் பாகிஸ்தான் இவருக்கு அஞ்சலி செய்கிறது. இக்பால் தமது மரணம் வரை, பல வருடகாலமாக காயிதே ஆஸம் அவர்களின் குருவாகவும், தத்துவ ஞானியாகவும் நண்பராகவும் இருந்துவந்தார். நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது இக்பாலுக்கு இருந்த அளவு கடந்த அன்பினை அராபியா மறந்து விட முடியாது.—"ஒரு முஸ்லிமானவனின் ஹிருதயமே முஸ்தபா (ஸல்) அவர்களின் இல்லம்: முஸ்தபா (ஸல்) அவர்களின் திருநாமத்துக்கே எமது புகழ் உரித்தாகும்."—அவரது கருத்துக்களை தனது சொந்தப் பாஷையினுல் அலங்கரிப்பது மூலம் அவருடன் நெருங்கிய தொடர்பு வைத்துக் கொள்ள அராபியா அதிக ஆவலுடன் இருக்கிறது. இதில் எமது நிலைமை என்ன? எமது இறந்த காலத்தைப்பற்றி அறிந்து கொள்ள முடியா விட்டால் எமது நிகழ்காலத்தைப்பற்றி அறிந்து கொள்ளவும் எம்மால் இயலாது.

இந்த நூற்றுண்டின் ஆரம்பத்தில், இக்பால் சுமார் இருபத்தேழு வயதானவராக இருந்த பொழுது நாம் எமது உறைவிடமான இத்தீவில், கலாசாரப் பண்பாட்டில் புறக்கணிக்கப்பட்டவர்களாகவும், கல்வித் துறையில் பிற்போக்கானவர்களாகவும், அரசியலில் மதிப்பில்லாதவர்களாகவும் இருந்தோம். மில்லத்திற் சேர்ந்த நாம், இஸ்லாத்தின் உரிமையையும், மத்திய யுகத்தில் இஸ்லாம் சிறப்புற்று விளங்கியதையும் முற்றுக மறந்து விட முடியவில்லை. கடல் கடந்த நாடுகளிலுள்ள எமது மூத்த சகோதரர்களுடன் எமது ஹிருதயங்களும் ஒத்தியங்கின. அவர்களுக்கு ஸேர் செய்யத் விடுத்த வேண்டுகோள் ஒரு சிறிதளவேனும் எங்கள் கண்களையும் விழிக்கச் செய்தன. அப்பொழுது நாமும் கலாச்சார பண்பாட்டு விஷயங்களில் எமக்கு வழிகாட்ட துருக்கியையே எதிர் பார்த்தோம். பாப்பாண்டவருக்குள்ள ஆத்மீக அதிகாரத்தை நாம் அந்நாட்டு சுல்தானுக்கு வழங்கினேம். சுல்தான் தேசப்பிரஷ்டம் செய்யப்பட்டு, மில்லத்தின் தலைமைப் பதவியைத் துருக்கி மறுத்து விட்டபோது நாம் ஏமாற்றமடைந்தோம். துருக்கி எம்மை கைவிட்டு விடவே நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஜன்ம பூமியான அராபியாவை நம்பியிருந்தோம். ஆனுல் அதுவும் ஏமாற்றத்தையே அளித்தது. மேற்கத்திய தேசியம் என்னும் புதிய போர்வையில் அராபியாவின் பழைய ஜாதி பேதம் மீண்டும் தலைகாட்ட ஆரம்பித்தது. துருக்கி எம்மைக் கைவிட்டுவிட்டது. அராபியாவும் எம்மைக் கைவிட்டு விட்டது. காலியாக உள்ள பதவியைப்

(25-ம் பக்கம் பார்க்க)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மண்டூர்

ம. நாகலிங்கம்

இக் கிராமம் கிழக்கு மாகாணத்திலுள்ள மட்டக்களப்புப் பகுதியில் பட்டிருப்புப் பிரிவை சார்ந்ததாகும். சுற்றிவர மூன்று பக்கங்களிலும் (வடக்கு, கிழக்கு, தெற்கு) மட்டக்களப்பு வாவி சூழ்ந்திருப்பதால் இவ்வூரை ஒரு தீபகற்ப மென்பதே பொருத்தமானதாகும். மட்டக்களப்பு வாவியை தாண்டி வடக்கே போரதீவும், கிழக்கே குறுமன் வெளியும், தெற்கே துறை நீலாவணை, நாவிதன் வெளி என்பனவும் அயல் கிராமங்களாக அமைந்துள்ளன. மேற்குப் புறம் ஊவா மாகாணத்தின் எல்லைவரை பத்தனை வகுப்பை சேர்ந்த காடுகளும் சோலைகளும் எல்லைகளாக அமைந்துள்ளன. வடமேல் புறமாக வயல் நிலங்களும் வெல்லா வெளி என்ற சிறு கிராமமும் உண்டு. பொதுத் தோற்றமாக இவ்வூரின் எல்லைகளையிட்டுக் கவனிக்கும் பொழுது இயற்கையரண்களால் சூழப்பட்டதும் கட்டுப்பாடானதுமான கிராமம் என்பது புலனாகின்றது.

'மண்டூர்' என்பது காரணங்கருதியிடப்பட்டதோர் பெயர் என்பது யாவருக்கும் ஒப்பமுடிந்ததோர் முடிவு. 'மண்டு' என்று சொல்லப்படும் ஒரு வகை ஈச்சை ஒத்த மரங்கள் ஆதியில் இவ்வூரில் அமோகமாகக் காணப்பட்டிருக்கிறது. அதற்குச் சான்றாக இன்றும் பல 'மண்டு' மரங்கள் அயல் நாடுகளில் காணப்படுகின்றன. அது மாத்திரமின்றி இங்குள்ளார் மண்டு மரத்தின் பிரயோசனங்களைப் பயன்படுத்த அறிந்தவர்களாகக் காணப்படுகின்றனர். அம் மரத்தின் விதைகளை இடித்து மாவாக்கி உண்கின்றார்கள். இப்போதுள்ளவர்களில் இவ்வுணவை விரும்புவோர் மிகச் சொற்பம். ஆனால் முந்திய காலத்தவர் மிகவும் விருப்பமாக இதை உண்டு வந்தனர் என்பதற்கு கிராமியக் கதைகளே போதிய சான்றாக இருக்கின்றன. பஞ்சம் ஏற்படும் காலங்களில் 'மண்டு' மரங்கள் அவர்கள் உயிருக்கு ஊறு துணையாக இருந்ததென்பதும் அக் கதைகளினால் அறியப்படுகிறது. ஆகையால் 'மண்' மரங்கள் அதிகமாக அவ்வூரிலிருந்த காரணத்தினாலே



துணையன் கல்

தான் மண்டூர் என்னும் காரணப் பெயரை அக்கால மக்கள் சூட்டினார்கள் என்பது நமக்குப் புலனாகின்றது. இக்கூற்றை ஆதரித்தே ஸ்ரீமத் சதாசிவ ஐயரவர்களும் ஈழகேசரி ஆண்டு மடலில் எழுதியுள்ளார்கள். மண்டூரின் கிழக்குப் பாகம் "மண்டுக் கொட்டை முனைத்துறை" என்னும் பெயரால் அழைக்கப்படுகிறது. இப்பெயரை நோக்குமிடத்தும் மேற்படி கூற்று உண்மையே என்பது தெட்டத் தெளிவாகின்றது.

## ஆதிச் சரித்திரம்:

ஆதியில் இவ்வூர் நிலை எவ்வாறிருந்தது என்பதையிட்டு அறிவதற்குப் போதிய சான்றுகள் கிடையாத போதிலும் இடைக்காலத்தில் கிட்டத்தட்ட சிங்கள ராட்சிக் காலத்தில் இவ்வூர்ப் பகுதி சிறந்து விளங்கியிருந்த தென்பதற்கு ஓரளவு சான்றுகள் கிடைக்கின்றன. இவ்வூரின் தென் மேல் பாகத்தில் 'தம்பலவத்தை' என்று ஒரு கிராமம் உண்டு. இக்கிராமங்களின் பெயர்களைச் சிங்களப் பெயர்களுடன் ஒப்பு நோக்கும் பொழுது வித்தியாசம் தோன்றுவதாயில்லை ஊற்றுக் கேணி, வேதத்துச் சேனை என்னும் இவ்வூரைச் சேர்ந்த இடங்களில் அழிந்து போன புத்த விகாரைகள் இன்னும் காணப்படுகின்றன. மேல் புறமாக "யாகசாலைச் சொக்கறை" என்னுமோர் இடமுண்டு. இவ்விடத்தில் சிங்கள உன்னுஞ்சையார்கள் இருந்து யாகம் செய்ததாகவும் கண்டியரசனுக்கு ஒருவித இடையூறும் நேரிடா வண்ணம் அவ்யாகம் செய்யப்பட்டதாகவும் அறியக்கிடக்கிறது.

ஆகையினால் மண்டூரிலும் அதைச் சேர்ந்த பகுதிகளிலும் ஆதியில் சிங்களரும் வசித்து வந்தார்களென்றும் அவர்கள் கண்டி அரசனுடன் நெருங்கிய தொடர்புடையவர்களாயிருந்தார்களென்றும் அறியக்கிடக்கிறது.

இதைவிட இங்குள்ள மக்களில் 'சிங்களக்குடி' என்ற ஒரு பகுப்பு மக்களிடையே இருந்து வருகிறது. கண்டிக் கலக காலத்தில் இவ்வூரைப் பலர் ஒதுக்கிடமாகவும் கொண்டிருக்கிறார்கள். உசனை, கோம்பானை, பித்தாளவட்டை போன்ற சிங்களக் கிராமங்களில் உறவு முறை கொண்டாடும் மக்கள் இன்றும் இங்கு காணப்படுகின்றனர். கலப்பு விவாகங்களும் செய்கின்றனர். இவைகளினால் சிங்களர் ஆதியில் இங்கு சீவித்துள்ளார்கள் என்பதும் நாளடைவில் அவர்கள் அருகிவிட்டார்களென்பதும் வலுவ


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டைகின்றது. நடுவு நிலைமையுடன் நின்று நோக்குவோருக்குச் சிங்களரைவிட, வேடரும் மிகச் சொற்பமாக ஆதியில் இங்கு சீவித்திருக்கின்றனர் என்பது ஓரளவு தெளியக்கூடும். மண்டுக் கொட்டை முனையின் கிழக்குப் பக்கமாக உயரமான ஒரு பிரதேசமுண்டு. அதற்கு "சோதயன் திடல்" என்று பெயர். அடர்த்தியான காடுகளைக் கொண்டது. இப்பகுதியில் சோதயன் எனப்படும் ஒரு வேடனும் அவனுடைய குடும்பத்தவரும் சீவித்ததாக அறியக் கிடக்கிறது. அவர்கள் பெரிய உருவம் உடையவர்கள். சமீபத்தில் அத்திடலை அகழ்ந்த காலத்து பெரிய 'சுங்கான்'களும், தடித்த பெரிய மட்பாத்திரங்களும் கண்டு எடுக்கப்பட்டது. ஆகவே மேற்படி அறிக்கை உண்மை யெனப்படுகிறது. பெரிய உருவம் உடையவர்களை இவ்வூரார் 'சோதயன்' என்று கூறுவதும் இதற்கு ஒரு ஆதாரமாகும்.

இவ்வூரின் மேற்கே அரைமைல் தூரத்தில் 'சுனையன் கல்லு' எனப்படும் சிறு மலையுளது. இதிலும் சின்னச் சுனையன், பெரிய சுனையன் எனப்பட்ட இரு வேடர்கள் இருந்து வந்தாகக் கூறுவர். இவர்கள் குளிப்பதற்காக உபயோகித்த சுனையும் பாவித்த உரலும் இன்றும் காணக்கிடக்கின்றன. இவைகளை யெல்லாம் சமீபத்தில் சேனைச் செய்கைக்காக காடுகளை அழித்த பொழுது காணக் கிடைத்தது. மண்டூர் கந்தசுவாமி கோயில் பூசை முறை மௌன பூசை முறையாகும் இதை வேட்டுவப் பூசை என்றும் கூறுவர். அக் கூற்று உண்மையாகில் வேடுவர் இருந்த தென்பதற்கு இதுவு மோர் சான்றாகும். இங்கு மக்களில் வேடசாதி என்ற ஒரு பிரிவு இன்று இருந்து வருகிறது. அவர்கள் கோயிலில் சில தொண்டுகளைச் செய்வர். இங்குள்ள கோயிலில் உள்ள வேலாயுதத்தை முதலில் வேடர்தான் கண்டதாகவும் கூறுவர். இவற்றைவிட தேன் எடுத்தல், அலைந்து அலைந்து வேட்டையாடல் முதலிய வேடருக்குரிய சிறப்பான சில தொழில்கள் இன்றும் சில மக்களிடம் காணக்கிடைக்கிறது. மேற்படி பல காரணங்களினாலே வேடரும் ஆதியில் இங்கு வசித்திருக்கின்றனர் என்பதை நம்பக் கூடியதாக இருக்கிறது.

## ஆதி நாகரிகம்:

சிங்களராட்சிக் காலத்தே இப்பகுதி சீரும் சிறப்பும் மிளிர்ந்திருக்கிறது. வேளாண்மைச் செய்கைக்கு வாய்ப்பான இடமாக இருப்பதைக் கண்ட சிங்கள அரசர் இப்பகுதியில் விசேஷ கண் வைத்திருந்தனர். "தெவுலனை" எனப்பட்ட குளத்தைக்கட்டி நாவகிரி, மூங்கிலாறு, இரட்டனாறு முதலிய வற்றினூடாக நீர்ப்பாய்ச்சியுள்ளனர். பழைய காலத்தில் (சிங்கள ராட்சிக் காலத்தில்) செய்கை பண்ணப்பட்ட பல நிலங்கள் பின்னர் செய்வாரற்றுக் காடடர்ந்து அழிந்து இருப்



சோதயன் திடல்

பதை இன்றுங் காணலாம். போர்த்துக்கீச, ஒல்லாந்த காலத்தில் அவைகள் கவனிக்கப்படாமல் சீர் கெட்டது. கிராமக் குளங்கள் பல வேளாண்மைச் செய்கைக்காக கட்டப்பட்டுள்ளது (பின் விரிவாகக் கூறுவாம்) ஒல்லாந்தருடைய காலத்தில் தென்னந் தோட்டங்கள் பல இங்கு உண்டாக்கப்பட்டிருக்கின்றன. இப்பொழுதும் அத்தோட்டங்களிலிருந்து கொப்பரா எற்றுமதி இன்றும் நடந்து கொண்டிருக்கிறது.

## பாதை:

கண்டி வதுளை முதலிய நகர்களுக்கு நேர் பாதைகளால் ஆதியில் இணைக்கப்பட்டிருந்தது. எல்லாம் சுவடுப் பாதை. ஆங்கிலேயர் காலத்தில் பாதைகள் திருத்தப்பட்ட பொழுது இப் பாதைகள் கவனிக்கப்படாமல் விடப்பட்டன. இதனால் அவை தூர்ந்து காடுகளால் கண்டிக்கு படையெடுத்துப் போனதாக அறியக்கிடக்கிறது. இன்றும் அப்பாதைகளால் சிலர் பிரயாணம் செய்வதாகக் கூறுகின்றனர். மிகவும் சுருக்கமானதும், இலகுவானதுமான அப்பாதைகளை அரசாட்சியார் கவனியாமல் விட்டிருப்பது இக்கிராமத்தின் துர்ப்பலமேயாகும்.

தற்பொழுது கல்முனை—மட்டக்களப்பு—உசனை போன்ற இடங்களுடன் பாதைகள் இணைககப்பட்டுள்ளது. கார் போக்குவரத்து நடைபெறுகிறது. உள்ளூரில் ஆதியில் தெருக்களெல்லாம் செப்பனிடப்படாதவைகளாய் இருந்தது. மாரி காலத்தில் சதுப்பாகவும் இருந்தது. ஆனால் இப்பொழுது எல்லாப் பாதைகளும் உயரமான தெருக்களாக மாறியுள்ளது. கிராமச் சங்கம் D. R. C. என்பவைகளின் பராமரிப்பின் கீழ் உள்ளவை. மண்டுக் கொட்டை முனைத்துறையிலிருந்து மேற்கு நோக்கி வரும் பாதை விசேடமானது இத்துறையும் D. R. C. க்கு உட்பட்டது.

## கல்வி:

ஆதியில் இங்கு தற்கால முறைப்படி கல்வியில்லாவிடினும் திண்ணைப் பள்ளிக்கூடங்கள் இருந்து வந்திருக்கின்றன. எட்டுச் சுவடிகளே அவர்கள் புத்தகங்களாக விளங்கின. வைத்திய முறையில் பிரசித்தி பெற்றவர்களாக விளங்கியுள்ளனர்- அது இயற்கை அவர்களுக்கு அளித்த சக்தி போலும். பாம்பு வைத்தியத்தில் மிகவும் கை தேர்ந்தவர்கள். இன்றும் அவர்கள் சந்ததி சந்ததியாகப் பாவித்த அரிச்சுவடிகளைக் கண்ணுறலாம். இதை விட அவர்கள் நாடகக் கலையில் பாண்டித்தியம் உள்ளவர்களாக விளங்கியுள்ளனர். தங்கள் வாழ்நாளில் பெரும் பொழுது நாடகத்திலே செல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


வழித்தவர்களும் இருந்திருக்கின்றனர். அக்கலையில் உள்ள அவாவில் உள்ள பொருட்களை யெல்லாம் இழந்தவர்களும் உண்டாம். நாடகப் பெயர்களையே தங்கள் பெயர்களுடன் சேர்த்துச் கொள்வார்களாம். உ—ம். திரௌபதி சீனி, கட்டியகாரக் கந்தர், அனுமாண் கணபதி. கலை ஆர்வம் மிக்க அக்கால மக்களின் சந்தியார் இன்றும் சில நாடகங்களை ஆடி மிகவும் புகழ் மாலை சூடியுள்ளார்கள். மத்தளம என்னும் தாளத்தைச் சுவை ததும்ப கையாள்வதில் தேர்ந்தவர்கள் இவ்வூரார். பிற் காலத்தில் மெதடிஸ்த சங்கத்தார் பாடசாலை யொன்றை ஸ்தாபித்துச் சில காலம் தொடர்ந்து நடத்தினார்கள். பின்னர் எழுந்த ஸ்ரீ ராமக் கிருஷ்ண சங்கப்பாடசாலை அவ்விடத்தை வகித்து இன்றுவரை தொடர்ந்து நடத்துகிறது.

### முன்னேற்றம்:

ஆதியில் வேடர் சிங்களர் வசித்து வந்து கால கெதியில் அருகிப் போனதாக அறிந்தோம். பின்னர் படையெழுச்சி காரணமாக இலங்கையை அடைந்த தமிழர்களில் பாண்டி நாடு, மலையாளத்தை சேர்ந்த தமிழர்கள் இங்கு வந்தும் குடியேறினர். மலையாளத்தைச் சேர்ந்த மந்திர வகை இன்னும் இங்கு வழங்கி வருவது குறிப்பிடத்தக்கதாகும். இவர்கள் குடியேறிய பின்னரே மண்டூர் மதிப்பிற் குரிய தீவாக விளங்கத் தொடங்கியது. கோயில் தொண்டூழியத்தின் பொருட்டும் பலர் இங்கு வந்து குடியேறியுள்ளார்கள். இன்னும் சிலர் கமச் செய்கைக்கு வாய்ப்பான இடம் என்று அறிந்து வந்து குடியேறியுள்ளார்கள். இப்போது ஏறக்குறைய 5000 த்திற்கு மேற்பட்ட மக்கள் வசிக்கிறார்கள். யாவரும் தமிழர்கள். கல்வி, வியாபாரம், விவாகம் முதலிய காரணங்களால் இக்கிராமம் யாழ்ப்பாணத்துடன் நெருங்கிய தொடர்பு பூண்டுள்ளது. மிக வேகமாக முன்னேறிக் கொண்டுவரும் இக் கிராமம் தற்பொழுது மண்டுக் கொட்டை முனையிலிருந்து மருங்கையடிப் பூவல் வரைக்கும் நீண்டுபரந்துள்ளது. மருங்கையடிப் பூவல் என்பது சமீபத்தில் 10வருடத்திற்குள்ளாகக் குடியேற்றப் பட்ட ஒரு பிரதேசமாகும். மருங்கை மரங்கள் அதிகமாக இருந்தபடியாலும் மிகச் சமீபத்தில் நீர் காணப்படுவதாலும் மேற்படி பெயரைப் பெற்றது. இப்பகுதியில் 600-க்கு குறையாத சனங்கள் சீவிக்கிறார்கள்.

### சமூகப் பழக்கம்:

பண்டு தொட்டே கடவுள் வழிபாடுடையவர்களாய் விசேஷ விரதம் கொண்டாட்டங்களில் சிரத்தையுடையவர்களாய் இருந்தனர். ஒரு தலைவனுக்குக் கீழ் அடங்கி நடக்கும் சுபாவம் படைத்த



மண்டூர் கந்தசுவாமி கோயில்

வர்களாயிருந்தனர். தெரியப்பட்ட பஞ்சாயத்தாரின் தீர்ப்பின் படியே தண்டனைகளைப் பெற்றனர். மண் கடகம் சுமத்தல், அடிபடுதல், மூசுறு விடுதல், நெற்றிக்கல் வைத்தல், கோதண்டம் இடுதல், தண்டம் கட்டல் முதலிய பலவுஞ் பஞ்சாயத்தாரால் இடப்படும் தண்டனைகளாம். ஆனால் பிற்காலத்தில் எழுந்த சந்ததியார் அதாவது பஞ்சாயத்தாரின் சந்ததியார் இவற்றை மறந்து தாங்கள் தான் இந்நாட்டின் ஏக சக்கரவத்திகள் என்ற நிலைக்கு மாறி விட்டார்கள். இதனால் அடிக்கடி சண்டைகளும் சச்சரவுகளும் ஏற்படத் தொடங்கின. இதன் பின்னர்தான் மக்கள் (ஆங்கிலேயர் காலந் தொட்டு) நீதி மன்றங்களை நாடத் தொடங்கினர்.

### விசேட சிறப்புகள்:

இவ்வூரின் பிரசித்திக்கு அங்குள்ள தேவாலயமே முதற்காரணமாகும் சரித்திரப்பிரட்த்தி பெற்ற இம் மண்டூர் கந்தசுவாமி கோயில் வருடத்திற்கு வருடம் கோயில்விழாவை விடப்பெரிய திருவிழாக்களைக் காணக் கூடியதாக இருக்கிறது. 1804-ம் ஆண்டு ஜோன்ஸ்ரன் என்ற ஆங்கிலத் தளபதி படை யெடுத்து வந்து இவ்வூரிலுள்ள சேனைத்துறை என்னுமிடத்தில் பாளயம் இட்டு இருந்தானும். அப்போது இந்துக் கோயில்களில் வெறுப்புக் கொண்ட படைத் தளபதி, கோயிலையும் கோயில் பூசர்களையும் கேலி செய்து தொந்தரவு செய்தானும். இதனால் மனம் நொந்த பூசகர் கடவுளை நோக்கி 'பழி' படுத்திருந்தாராம். அப்போ காட்டிலிருந்து வந்த குளவிக் கூட்டமொன்று வந்து படைத் தளபதி, வீரர்கள் யாபேரையும் குத்தி தொந்தரவு செய்ததாம். அதனால் வீரர்கள் அவ்விடத்தைவிட்டு ஓட்டம் பிடித்தனராம். ஓடும் பொழுது வாட்களையும், துவக்குகளையும் தவற விட்டுப் போனார்களாம் என்று ஒரு சந்ததியான கதை கூறும். இப்பொழுதும் அவற்றில் ஒருதுவக்கும் வாளும் கோயிலில் இருக்கின்றன. ஈழகேசரி ஆண்டு மடலில் ஸ்ரீமத். சதாசிவ ஐயரவர்கள் இதையிட்டு எழுதியுள்ளார்கள். எப்படியாகிலும் ஜோன்ஸ்ரன் கண்டிக்கு இவ்வூரின் வழியாய் படையெடுத்து போனான் என்பது உண்மை.

இக் கோயில் வண்ணக்கர் மண்டூரில் உள்ளவராவர். குறுமண்வெளி, பெரிய கல்லாறு, துற நீலாவணை என்ற நான்கு ஊரிலுமிருந்து நான்கு கணக்கப்பிள்ளைமார் தெரியப்படுவர். இந்த ஐவரும் பெரிய கற்பகனும் சேர்ந்தே கோயில் நிர்வாகத்தைச் செய்வர். கோயிலைவிட இன்னுமிரு சைவக் கோயில்களும், ஒரு மெதடிஸ்த தேவாலயமும் 4 பாடசாலைகளும் வைத்திய சாலையும் உப தபாற் கந்தோரும் இருக்கின்றன. கிராம முன்னேற்றச் சங்கம்—சனசமூக சங்கங்களும் அமைக்கப்பட்டுள்ளன. சனசமூக நிலையச் சார்பில் சிறப்பான ஒரு வாசிக சாலையும் அமைந்து 4 வருடங்களாக நடை பெறுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெடுந்தீவு அரசினர் கனிஷ்ட பாடசாலை

## ஐந்து ஆண்டு நிறைவு விழா

ஆங்கிலப் பாடசாலை ஒன்று இல்லாமல் நெடுந்தீவு மக்கள் பல வருடமாக பட்டகஷ்டங்கள் அளப்பில. ஒவ்வொரு ஏழையும் பணக்காரனும் இவ்வூரிலேயே ஆங்கிலங் கற்பதற்கு வசதி அளிக்கும் பொருட்டு 1946-ம் ஆண்டு தை மீ 17-ந் திகதி திங்கட்கிழமை முதன் முதலாக இங்கு ஓர் ஆங்கிலப் பாடசாலையை மாஜி கல்வி மந்திரி டாக்டர் C. W. W. கன்னங்கரா அவர்கள் அங்குரார்ப்பணஞ் செய்து வைத்தனர். இத்தீவில் இப்பாடசாலையை நிறுவுவதற்காக நீண்ட காலம் உழைத்தவரும் சட்ட நிரூபண சபையில் தீவுப்பகுதி மக்களின் பிரதிநிதியாக இருந்தவருமான சேர். வை. துரைசுவாமி அவர்களுக்கு இத்தீவு மக்கள் உயிருள்ளவரை நன்றியுடையவர்களாவார்கள்.

இப்பாடசாலையின் ஐந்தாண்டு நிறைவு விழா சென்ற மாதம் வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டது.

இலங்கைச் சர்வகலாசாலை விரிவுரையாளரான திரு. கே. எஸ். அருணந்தி, முதலியார். செ. சின்னத்தம்பி ஆகியோருடனும் தமதுகுடும்பத்தினருடனும் தற்காலிக கல்வி மந்திரி கௌரவ திரு கே. கனகரத்தினம் அவர்கள் மேற்படி விழாவுக்குத் தலைமை வகிப்பதற்காக குறித்த தினத்தன்று மாலை 4 மணியளவில் நெடுந்தீவுக்கு வந்து சேர்ந்தனர். நானூறுக்கு மேற்பட்ட வெளியூர் நண்பர்களும் சமூகமளித்தனர்.

இப்பாடசாலை உதயமாகிய நாள் தொட்டு இற்றைவரை இதன் அதிபராகவிருந்து அரும்பெருஞ் சேவைபுரியும் ஆசிரியர் திரு. எட்வேட் நவரத்தின சிங்கம் அவர்கள் கடந்த ஐந்து வருடங்களாகப் பாடசாலையில் ஏற்பட்ட முன்னேற்றங்களையிட்ட அறிக்கையை வாசித்துக் காட்டி பாடசாலையின் தேவைகளையும் வெளிப்படையாக வேண்டினர். திருமதி கனகரத்னம் அவர்கள் பரிசுகளை வழங்கினார்கள்.



தற்காலிக கல்வி மந்திரி திரு. கே. கனகரத்தினம் அவர்கள் மோட்டார் படகில் நெடுந்தீவுப் பாலத்தை யடைந்த காட்சி.

கூட்டத்துக்கு தலைமை வகித்த திரு. கனகரத்தினம் அவர்கள் பேசியபொழுது இருபதாம் நூற்றாண்டில் இலங்கையின் இதர பாகங்களிற் பல மேலைத்தேய நாகரிகத்தில் மூழ்கிப் பல்வேறு மாற்றமடைந்திருக்க நெடுந்தீவானது தூய்மையை அடிப்படையாகக்கொண்ட பண்டைத்தமிழர் நாகரீகத்தைக் கைவிடாதிருப்பது தமக்கு மகிழ்ச்சியை யளிப்பதாகக் கூறினர். அத்துடன் பாடசாலையின் முன்னேற்றத்தையும் ஆசிரியர்களது சேவையையும் நன்கு பாராட்டி பாடசாலையின் தேவைகளைப் பூர்த்தி செய்ய முயல்வதாக வாக்களித்தார். வெங்காயக் கூடை முடைந்து பொருள் சம்பாதிப்பதால் இத்தீவின் பொருளாதாரவளர்ச்சிக்கு வழிகாட்டும் இப்பாடசாலை கல்வி இலாக்காவுக்கு பெருமிதமளிப்பதாயிருக்கிறதென அவர் குறிப்பிட்டார்.

திரு. அருணந்தி அவர்கள் பேசுகையில் நெடுந்தீவை நெய்தல் நிலமென வர்ணித்து அங்கு வதிவோரின் சிறப்புகளை மெச்சினர். பாடசாலைப் பிள்ளைகளுக்குக் கைத்தொழிற் கல்வியால் ஏற்படக்கூடிய பயன்களைத் தமது சொந்த அனுபவங்களின் மூலம் விளக்கினர். எப்பாஷை கற்பினும், எத் தொழில் பழகினும் தமிழர்கள் தமது பண்புகளை மறவாது பண்டைய கலாச்சாரங்களை நிலைநாட்டப் பாடுபடல் வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.

மாணவருக்குப் புகட்டப்படும் கல்வி அவர்களது வாழ்க்கைக்கு உறுதுணை புரிவதாகவும், ஞான வளர்ச்சிக்கு கந்ததாகவுமிருக்க வேண்டுமென்று முதலியார் செ. சின்னத்தம்பி அவர்கள் ஆதாரங்காட்டிப் பேசினர்.

பாடசாலை மாணவரால் பல நாடகங்கள் நடித்துக் காட்டப்பட்டன. சிறுவர் நடித்த மதுவிலக்கை யொட்டிய நாடகம் அங்கு கூடியிருந்த யாவரையும் மகிழ்ச்சியிலாழ்த்திற்று. யாழ்ப்பாணக் குடாநாட்டிலிருந்து வந்த சில மாணவிகளால் நிகழ்த்தப்பட்ட நடனக் கச்சேரிகள் வெகு ஜோராயிருந்தன.

---

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

முன்னர் கூறியவற்றிலிருந்து புலனாகின்றது. இவ்வளவு அநேகமான கடமைகள் என்மீது சுமத்தப்பட்டிருப்பதையிட்டு நான் முறையிடவில்லை. கடுமையான வேலையைச் செய்து முடிப்பதிலும் சந்தோஷமுண்டு. நானும் நீங்களும் எங்கள் கடமைகளை விருப்பத்துடன் ஏற்று, யாதேனும் அரிய பொருளைத் தேடிக் கஷ்டங்களுக்கூடாக நெடுவழி போவோர் போல, ஒருங்கு செல்வோம்.

இவ்வளவில் நான் இப்பேச்சை முடிக்கவேண்டும். இப்பேச்சிலும் இதன் பின்னர் வரும் பேச்சுக்களிலும் அடங்கிய விஷயங்கள் உங்களுக்கு உபயோகமாயிருக்கும் என நம்புகிறேன். பரிபாலன அதிபர் என்ற முறையிலும், அநேக ஆண்டுகளாக ஆசிரியராக இருந்து கல்வியூட்டி முற்றிய அனுபவம் வாய்ந்தவர் என்ற முறையினும், நான் உங்கள் எண்ணங்களையும், உணர்ச்சிகளையும், ஆசைகளையும் அறியக் கூடியவனாக இருக்கிறேன் என்பது உங்களுக்குத் தெரியவரும். மேலும், நானும் நீங்களும் இத்தொழிலில் ஈடுபட்டிருப்பது இலங்கைச் சிறுவரின் நன்மை கருதியல்லவோ? இச் சிறுவரின் மத்தியில் சதாகாலமுமிருந்து இவர்களுக்குக் கல்வியூட்டுபவர்களென உங்களைக் கருதி எனது அபிப்பிராயங்களைச் சிநேக பான்மையாக இப்பேச்சுக்கள் மூலம் வெளியிடுகிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்



**கலைக் காட்சி வாயிலில்:** திரு. சு. நடேசபிள்ளை, தற்காலிக கல்வி மந்திரி திரு. க. கனகரத்தினம், திரு. வி. ஈ. நரசிம்மன், திரு. எஸ். ஆர். கனகசபை முதலியார் கலைக் காட்சியைப்பற்றி உரையாடிக் கொண்டு நிற்கின்றனர்.

"யாழ்ப்பாணத்திற்குச் சென்று அங்கு நடைபெறும் தமிழ் விழா நிகழ்ச்சிகளைப்பற்றி எழுதியனுப்பு" என்று **ஸ்ரீ லங்கா** பத்திராதிபர் கட்டளையிட்டார். தமிழ் விழாவில் பங்குபற்ற அரியதோர் சந்தர்ப்பம் இடைத்ததையிட்டு மகிழ்ச்சிதான். ஆனால் விழாவில் நிகழ்ச்சிகள் யாவற்றையும் நன்கு அவதானித்து ஒரு கட்டுரையாக எழுதித் தொலைக்க வேண்டுமே என்பதை நினைத்த பொழுது ஓரளவு கவலையேற்பட்டது. என்றாலும் பத்திராதிபர் இட்ட சட்டளையை மீறமுடியுமா? மனதை ஒருவாறு திடப்படுத்திக் கொண்டு புறப்பட்டேன். ஞாயிற்றுக்கிழமை (29-4-51) காலை யாழ்ப்பாணப் புகையிரத ஸ்தானத்தையடைந்து அங்கிருந்து நேரே பரமேஸ்வரக் கல்லூரிக்குச் சென்றேன். கல்லூரி வாயிலை யடைந்ததும், தமிழர் சிற்ப, சித்திர முறைப்படி 'T' வடிவத்தில் நவமாக அமைக்கப்பெற்ற விபுலானந்தர் பந்தலின் முன் கெம்பீரமாகப் பறந்து கொண்டிருந்த கொடி 'தமிழ் மக்களே வருக! வருக!' எனக் கையசைத்து வரவேற்றது. கொடியை உற்று நோக்கினேன். முடியுடை மூவேந்தர்களின் சின்னங்களாகிய புலி, மீன், வில் என்பவற்றுடன் யாழும் சித்திரிக்கப்பட்டிருப்பதை கண்டு [illegible]

## வரவேற்பு ஒழுங்கு

கொடிக்கு வணக்கம் செலுத்திவிட்டு கல்லூரி மண்டபத்துக்குள் நுழைந்து தமிழ் விழாக் காரியாலயத்துக்குச் சென்றேன். அங்கே முதலியார் செ. சின்னத்தம்பியவர்களும் திரு. க. நவரத்னம் அவர்களும் பலவகையான ஒழுங்குகளைச் செய்து கொண்டிருப்பதைக் கண்டேன். 'ஸ்ரீ லங்கா' பத்திரிகைப் பிரதிநிதியென என்னை அறிமுகப்படுத்தியதும், காரியாலயத்தில் இருந்த தொண்டர் ஒருவர் எனது பெயரை ஒரு புத்தகத்தில் பதிந்து கொண்டு, உணவுச் சீட்டு. பாட்ஜ், நிகழ்ச்சி நிரல் முதலியவற்றைத் தந்தார். அடுத்தபடியாகப் பத்திரிகை நிருபர் காரியாலயத்துக்குச் சென்றேன். யான் ஒரு பத்திரிகை நிருபர் என அறிந்ததும், அந்தப் பகுதிக்குப் பொறுப்பாயுள்ள திரு. இராஜ அரியரத்தினம் அவர்கள் "யாழ்ப்பாணம்" என்ற அழகிய நூலொன்றினையும், கலைக் காட்சிக்கு வழிகாட்டியாகப் பிரசுரிக்கப்பட்ட வெளியீட்டினையும் விழாவைப் பற்றிய சகல விவரங்களையும் தந்துதவினார்கள். அங்கிருந்து வெளியே வந்து பார்த்த பொழுது பந்தலில் அதிகம் பேர் இருக்கவில்லை. பந்தல் நிறையக் கூடியதாகச் சனங்கள் வரக்கூடுமோ என்ற சந்தேகம்கூட மெல்லிதாக என் மனதில் எழுந்தது. அங்கிருந்து நேரே நாவலர் பாடசாலைக்குச் சென்றேன். தமிழுக்குப் புத்துயிரளித்த நாவலர் பெருமான் ஸ்தாபித்த பாடசாலைக்குச் சென்றதும் என் உள்ளம் குளிர்ந்தது. தமிழ் ஏட்டுச் சுவடிகளை நாவலர் பாடசாலையிலிருந்து ஊர்வல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# விழா

மாக எடுத்துச் செல்ல ஒழுங்கு செய்த அறிஞர்களை மனமார வாழ்த்தினேன்.

### ஊர்வலம்

எட்டுச் சுவடிகளுக்குப் பட்டும் பூமாலையும் சாத்தி பூசை செய்யப்பட்டது. பின்னர் எட்டுச் சுவடிகளின் ஊர்வலம் வண்ணை சைவப்பிரகாச வித்தியாசாலையிலிருந்து சூழிக்கரை பிச்சையப்பா கோஷ்டியினரின் நாதஸ்வரக் கச்சேரியுடன் காலையிற் புறப்பட்டுச் சென்றது. தெருவின் இரு மருங்கிலும் ஆயிரக்கணக்கான மக்கள் கூடி நின்று தம் மரியாதையைச் செலுத்தினர். ஊர்வலம் பரமேஸ்வரக் கல்லூரியை வந்தடைவதற்கு முன்னர் மோட்டார் வண்டியிலேறி விபுலானந்தர் பந்தலில் வசதியான ஓரிடத்தில் உட்கார்ந்து கொள்ளலாமென எண்ணி விரைந்து வந்தேன். பந்தலில் இடமின்றி ஜனங்கள் வெளியே நிற்பதைக் கண்டு சிறிது ஏமாற்றமடைந்தேன்.

இந்தப் பந்தலை இன்னும் கொஞ்சம் பெரிதாகப் போட்டிருக்கக் கூடாதா என்று என் பக்கத்தில் நின்ற நண்பர் ஒருவரைக் கேட்டேன். "வரவேற்புக் கழகத்தார் எதிர் பார்த்ததை விடப் பத்து மடங்கு சனங்கள் வந்து சேர்ந்தால், வரவேற்புக் கழகத்தார் என்னதான் செய்ய முடியும்?" என்று என் நண்பர் கேட்டார். அதுவுஞ் சரிதான் என்று தலையசைத்தேன். பந்தலில் இடமில்லாதிருந்தாலும், வெளியே நின்று சொற்பொழிவுகளைக் கேட்கக் கூடியதாக ஒலி பெருக்கிகளை அமைத்திருந்தமை பாராட்டத்தக்கதே. மேலும் எத்தனையாயிரம் ஜனங்கள் வந்தாலும் கொள்ளக்கூடிய விசாலமான மைதானத்தைக் கொண்ட கல்லூரியை



விபுலானந்தர் மண்டப மேடையில் தற்காலிக கல்வி மந்திரி திரு. க. கனகரத்தினம், திரு. வி. குமாரசாமி, பண்டிதர். சி. கணபதிப்பிள்ளை, திரு. கே. எஸ். அருணந்தி முதலியோர் காணப்படுகின்றனர்.

நிறுவிய இராமநாத வள்ளலை மனமொழி மெய்களால் போற்றாதிருக்க முடியுமா? கொழும்பிலே சிறு மண்டபங்களில் பெருங் கூட்டங்கள் நடைபெறும் பொழுது நாங்கள் படும் அவலம் அப்பொழுது என் நினைவுக்கு வந்தது.

எட்டுச் சுவடிகளின் ஊர்வலம் விபுலானந்தர் மண்டபத்தை யணுகிவரும் பொழுது அரசாங்க சமாச்சாரப் பகுதி பல காட்சிகளைப் படம் பிடித்தது. [illegible] அதிகாரிகள் காலை நிகழ்ச்சிகளை அஞ்சல் செய்தனர். விழாவினைக் கண்ணாரக் கண்டு கேட்டுப் பயனடைய முடியாத பல்லாயிரக்கணக்கான தமிழன்பர்களின் பேராவலைத் தீர்த்து வைப்பதில் ரேடியோ சிலோன் மூன்று நாட்களும் புரிந்த சேவையைப் பாராட்டாமல் இருக்க முடியாது. இவ்விழாவில் பொலிஸாரும் தொண்டர் படையினரும் காந்தி சேவா சங்கத்தினரும் ஒரு முகமாகத் தொண்டாற்றியது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தமிழ் விழா: ஏட்டுச் சுவடிகளின் ஊர்வலம்.

ஏட்டுச் சுவடிகளைத் தமிழ்ப் பிரமு கர்கள் தாங்கி மேடைக்கு எடுத்துச் சென்று பீடத்தின் மீது வைத்தனர்.

யாழ்ப்பாண மேற்றிராணியார் அதி. வந். எமிலியானுஸ்பிள்ளை, இந்திய தற்காலீக ஹைகமிஷனர் ஸ்ரீ. என். இ. எஸ். இராகவாச்சாரி, சென்னை மாஜி கல்வி மந்திரி திரு. ரி. எஸ். அவிநாசிலிங்கம் செட்டியார், கைத்தொழில் மந்திரி திரு. ஜி. ஜி. பொன்னம்பலம், தற்காலிக கல்வி மந்திரி திரு. க. கனகரத்னம், ஸேர். கந்தையா வைத்தியநாதன், டக்டர். கே. எஸ். கிருஷ்ணன், வண. தனிநாயகம் சுவாமி, திரு. கே. எஸ். அருள்நந்தி, ஜனப் பிரதிநிதிகள் சபை அங்கத்தினர்களான திரு. எஸ். தொண்டமான், திரு. கே. இராஜலிங்கம், திரு. வி. நடராஜா, திரு. வி. சுந்தரலிங்கம், திரு. வி. குமாரசுவாமி, திரு. வி. வன்னியசிங்கம், செனெற்றர். எஸ். ஆர். கனகநாயகம், மேயர் திரு. வி. பொன்னம்பலம் ஆதியோர் மேடையில் அமர்ந்திருந்தனர்.

## வரவேற்புரை

வரவேற்புக் கழகத் தலைவர் திரு. சு. நடேசபிள்ளை அவர்கள் தமது வரவேற்புரையில் "இது எல்லோரும் பெருமிதங் கொள்ளக்கூடிய ஒரு சந்தர்ப்பமாகும். இது இலங்கைச் சரித்திரத்திலே ஈடிணையற்ற சம்பவம்" எனத் தொடங்கி தமிழ்க் கலைக் களஞ்சியம் தயாரிக்கும் தொண்டினைப் பற்றியும் குறிப்பிட்டார். பின்னர் புதுடில்லி தேசிய பௌதிக ஆராய்ச்சிச்சாலை அதிகாரி டக்டர். கே. எஸ். கிருஷ்ணன் தமிழ் விழாவைத் திறந்து வைத்துப் பேசுகையில் யாழ்ப்பாண நாட்டின் தமிழ்ப் பண்பாட்டினை வியந்து கூறி, கலைக் களஞ்சியம் நிறைவேறுதற்கு யாழ்ப்பாணத்தவர்களும் ஒத்துழைக்க வேண்டுமெனக் குறிப்பிட்டார். பரமேஸ்வரக் கல்லூரி மேண் மாடியில் கோயிற் கட்டடக் கலை நிபுணர் திரு. நரசிம்மன், புதை பொருளாராய்ச்சி உப-அதிபர் திரு. எஸ். சண்முகநாதன், திரு. எஸ். ஆர். கனகசபை, திரு. எஸ். கந்தையா முதலியோர் ஒழுங்குசெய்த கலைக் காட்சியை ஸேர். கந்தையா வைத்தியநாதன் திறந்து வைத்துப் பேசுகையில் கலையின் உண்மை நோக்கம்யாது என்பதை விளக்கிக் காட்டினார்கள்.

## தலைமையுரை

பின்னர் விழாத் தலைவர், சென்னை 'சுதேச மித்திரன்' பத்திரிகை ஆசிரியர் திரு. வி. ஆர். ஸ்ரீநிவாசன் தமது தலைமையுரையில் "அன்பர்களே! எத்தனையோ மகாநாடுகளுக்கு நான் தலைமை வகித்திருக்கிறேன்; ஆனாலும் தமிழ்த் திருவிழாவுக்குத் தலைமை வகிக்கும் போது உள்ளத்தில் உவப்புடன் ஊற்றெடுக்கும் உணர்ச்சியை மதிப்பிட முடியாது. இதற்கு எதுவும் இணையாகாது" என்று குறிப்பிட்டார். தமிழ் அச்செழுத்து உருவங்களை மாற்றியமைப்பதால் ஏற்படும் நன்மைகளைப் பற்றியும் அவர் கூறினார். எழுத்துச் சீர்திருத்தங்களைக் காட்டும் வகையில் தலைவருடைய தலைமையுரை சென்னையில் அச்சிடப்பட்டு அன்பர்களுக்கு வழங்கப்பட்டது. விழா முடிவில் நன்றியுரை கூறிய திரு. க. கனகரத்னம் அவர்கள் உணர்ச்சியுடன் பேசினார்கள். திரு. கனகரத்னம் அவர்கள் சென்னைத் தமிழ் வளர்ச்சிக் கழகத்தை வரவழைக்காதிருந்தால், இத்தகைய சிறப்பான விழாவினை யாழ்ப்பாணத்தவர்கள் கண்டின்புறும் பாக்கியத்தை இழந்திருப்பர் என்பதை அங்கிருந்தவர்கள் அப்போது உணர்ந்தனர்.

பந்திக்கு முந்து படைக்குப் பிந்து என்பது பழமொழியல்லவா. விழா முடிந்ததும் நேரே உணவருந்தும் இடத்துக்கு ஓடிப் போனேன். அங்கே "போதியளவு சாப்பாடு எத்தனை பேருக்கும் தாலாம் அவசரப்படாதீர்கள்" என்று ஒருவர் அடிக்கடி கூறிக்கொண்டே நின்றார். இவர் ஒரு ஹோட்டல் மனேஜராகத்தான் இருக்க வேண்டும் எனக் கருதினேன். பசி கிளம்பியதால் விழுந்தடித்து போசனை சாலையை முற்றுகையிட்ட சில அன்பர்களின் கோபாவேசம்கூட திரு. க. இராஜசேகரனின் இன்சொற்களால் தணிந்துவிட்டது. பொறுமையே உருவாய இவர், புலவர் திலகம் தி. த. கனகசுந்தரம்பிள்ளையின் அருமைப் புதல்வர் எனப் பின்னர் அறியலானேன். திரு.ச. அம்பிகைபாகன், திரு. எஸ். கே. வேலாயுதபிள்ளை ஆதியோர் இந்தியப் பிரதிநிதிகளுக்கு வேண்டிய சௌகரியங்களைச் சலிப்பன்றிச் செய்துதவினர். அறுசுவையுணவினை தொண்டர்கள் அன்புடன் பரிமாறினர். அளவுக்கு மிஞ்சியுண்ட களைப்பினால் சிறிது நேரம் ஒரு மரத்தின் கீழ் படுத்துறங்கினேன். பின்னர் கலைக் காட்சியைப் பார்ப்பதில் அதிக நேரம் செலவிட்டேன். தமிழ் விழா மலர் ஒன்றினையும் வாங்



விபுலானந்தர் பந்தல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிக் கொண்டேன். ஈழ நாட்டுப் பண்பாட்டின் நவநீதமாக இம்மலர் விளங்குகின்றது.


மாலையில் "சங்க இலக்கியத்தின் சிறப்பியல்பு" என்னும் பொருள் பற்றி சுவாமி தனிநாயகம் அவர்கள் அரியதோர் சொற்பொழிவாற்றினர். "சுவாமி தனிநாயகம் பேசும் பொழுது ஒரு சபா நாயகமும் வேண்டுமா?" என்று தலைமைவகித்த பேராசிரியர் ரா. பி. சேதுப்பிள்ளையவர்கள் சுவாமியவர்களின் சொற்பொழிவைப் பாராட்டினார்கள். இதன் பின்னர் வித்துவான் ஏ. பெரியதம்பிப்பிள்ளை, முது தமிழ்ப் புலவர் மு. நல்லதம்பி, திரு. ம. பொ. சிவஞான கிராமணியார் முதலியோர் பேசினர்.

## இரண்டாம் நாள்:

அடுத்த நாட் காலை விஞ்ஞானப் பகுதியின் கீழ் பல சொற்பொழிவுகள் நிகழ்ந்தன. 'காட்சி மூலங் கல்வி' என்னும் பொருள் பற்றி திருமதி ஈ. தா. இராஜேஸ்வரி அம்மையாரும் "வாழ்க்கையும் உளத் தத்துவமும்" என்னும் பொருள் பற்றி திரு. க. ச. அருணந்தி அவர்களும் சொற்பொழி வாற்றினர். மேனாட்டு நல்லறிஞர் சாத்திரங்களைத் தமிழிலும் பேச முடியும் என்பதற்குச் சான்றாகத் திரு. அருணந்தியவர்களின் விரிவுரை யமைந்திருந்ததைச் சனங்களும் தலைவரும் நன்குணர்ந்தனர். மாலை நிகழ்ச்சிகளில் தமிழ்ப் பண்பாட்டின் வளர்ச்சி, என்னும் பொருள் பற்றி வித்துவான் ரி. பி. மீனாட்சிசுந்தரம் பிள்ளையும் 'இஸ்லாமியரும் தமிழரும்' என்பது பற்றி ஜனாப். எஸ். எம். கமால்தீனும் பேசினார்கள். சர்தார் வேதரத்தினம் 'சர்வோதயம்' என்பதன் பொருளை விளக்கிப் பேசினார். அன்றிரவு பாவைக்கூத்து பார்ப்பதற்குப் பெருந்திரளான சனங்கள் கூடியிருந்தனர்.



தமிழ் விழாவில் ஈழத்துப்புலவர் சிகாமணி மகாவித்துவான் பிரம ஸ்ரீ சி. கணேசையர் அவர்கள் பொன்னாடை போர்த்துக் கௌரவிக்கப்பட்டார்கள்.



பேராசிரியர் பண்டிதர் சி. கணபதிப் பிள்ளை அவர்கள் தமிழ் விழாவில் தெள்ளுற்ற தமிழ் அமுதம் வழங்கினார்கள்.

## மூன்றும் நாள்:

செவ்வாய்க்கிழமை காலை இலக்கிய இன்பம் நுகர்வதற்காகப் பல்லாயிரக் கணக்கான சனங்கள் குழுமியிருந்தனர். 'இக்கால இலக்கியம்' என்னும் விஷயம் பற்றி பேராசிரியர் அ. சீனிவாசராகவன் ஓர் ஆராய்ச்சிச் சொற்பொழிவு நிகழ்த்தினார். 'தமிழ்' என்னும் பொருள் பற்றி பண்டிதர் சி. கணபதிப்பிள்ளையவர்கள் தமக்கேயுரிய தனி நடையில் சொன்மாரி பொழிந்தார்கள். 'திருக்குறள்' என்னும் விஷயம் பற்றி டக்டர் மு. வரதராஜன் சிறந்த சொற்பொழிவாற்றினார். திருமதி மகேஸ்வரி மகாதேவாவும் வித்துவான் வேந்தனாரும் பின்னர் பேசினர். இவ்விழாவின் போது மகா வித்வான் பிரமஸ்ரீ சி. கணேசையர் அவர்கள் பொன்னாடை போர்த்துக் கௌரவிக்கப்பட்டமை தமிழன்னையைக் கௌரவித்ததாகவே கருதப்படவேண்டும். பழுத்த புலமையுடைய ஐயர் அவர்களின் பேராற்றலைப் பற்றி பேராசிரியர் ரா. பி. சேதுப்பிள்ளை அவர்களும் ஸ்ரீ அவிநாசிலிங்கம் செட்டியார் அவர்களும் பாராட்டிப் பேசினர். ஐயர் அவர்களும் சிறிது நேரம் பேசி தமது நன்றியைச் செலுத்தி, யாழ்ப்பாணத்தில் தமிழ் விழா நடைபெறுவது தமக்கு மகிழ்ச்சியைத் தருவதாகக் குறிப்பிட்டார். சென்னைத் தமிழ் வளர்ச்சிக் கழகக் காரியதரிசிகளான கல்கியும் தூரனும் விழாவில் பங்கு பற்றி வேண்டிய உதவி புரிந்தனர். அன்றிரவு பரமேஸ்வரக் கல்லூரி வளவு முழுவதும் இடமின்றிச் சனங்கள் கூடியிருந்தனர். திருமதி. எம். என். வசந்தகுமாரியின் இசை விருந்துடன் விழா இனிது நிறைவுற்றது.

வாழ்க தமிழ் மொழி!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Appropriate Technology Services
121, POINT-PEDRO ROAD
NALLUR, JAFFNA
No.................



# யாழ்ப்பாண டிஸ்திறிக்கில் சேமிப்புக் கூட்டம்

உள் நாட்டு விவகார கிராமாபிவிருத்தி மந்திரி சேர். ஒலிவர் குணத்திலக்க அவர்கள் யாழ்ப்பாணத்துக்கு விஜயஞ் செய்தபோது தேசிய சேமிப்பு இயக்க டிஸ்திறிக் ஸ்தாபகர் முதலியார். வி. தியாகராஜா அவர்கள் 1951 சித்திரை மீ 12-ந் திகதியன்று மானிப்பாய் சேமிப்பு நிலையத்தில் சேமிப்புக் கமிட்டிகளின் மகாநாடு ஒன்றினை ஒழுங்கு செய்தார்.

சேர். ஒலிவர் அவர்கள் டாக்டர். ஸ்பென்ஸர் ஹாச், கிராமாபிவிருத்தி உதவி டைரக்டர் திரு. பி. பி. எல் லெபொல, யாழ்ப்பாண அரசாங்க ஏஜண்டுத்துரை திரு. பி. ஓ. பெர்ணண்டோ, தற்காலிக கல்வி மந்திரி கௌரவ. திரு. கே. கனகரத்தினம் ஆகியோருடன் வந்து சேர்ந்தார்கள்.


தேசிய சேமிப்பு இயக்கத்துக்கும் கிராம அபிவிருத்தி இயக்கத்துக்கும் கர்த்தாவானவர் ஸேர். ஒலிவர் அவர்களே என்று டிஸ்திறிக் ஸ்தாபகர் முதலியார் வி. தியாகராஜா அவர்கள் சேர். ஒலிவர் அவர்களை வரவேற்றுப் பேசுகையில் குறிப்பிட்டுப் பின்னர் தேசிய சேமிப்பு இயக்கம் யாழ்ப்பாண டிஸ்திறிக்கில் அடைந்த பல்வேறு வளர்ச்சிகளையும் எடுத்துரைத்தனர். யாழ்ப்பாண டிஸ்திறிக்கில் எதிர்பார்க்கப்பட்ட ஆகக்கூடிய தொகையிலும் மேலதிகமாக ஒவ்வொரு வருடமும் சேமிக்கப்பட்ட சேமிப்புத் தொகைகளை வாசித்துக்காட்டி விளக்கினார். தேசிய சேமிப்பு இயக்கத்தினால் முதன் முதலாக இலங்கையில் ஸ்தாபிக்கப்பட்ட சேமிப்பு நிலையம் இதுவே என்றும் யாழ்ப்பாண டிஸ்திறிக்கில் சேமிப்பு பிரசாரஞ் செய்வதற்கு இதுவே கேந்திர ஸ்தானமாகவிருந்ததென்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

இப்பகுதியில் வசிக்கும் மக்களின் பொருளாதார, சமூக சீர்திருத்தங்களுக்காக உழைத்த இந்த சேமிப்பு நிலையத்துக்கு இந்தடிஸ்திறிக்கிலேயே முதன் முதலாக சேர். ஒலிவர் அவர்கள் விஜயஞ் செய்தது மிகவும் பொருத்தமானதே யென்று தற்காலிக கல்வி மந்திரி கௌரவ. திரு. கே. கனகரத்தினம் அவர்கள் கூறினார்கள். இலங்கையில் உள்ள இவ்வியக்கத்தின் டிஸ்திறிக் ஸ்தாபகர் வி. தியாகராஜா அவர்கள் நாட்டுக்குச் செய்த மெச்சுதற்கரிய சேவைகளையும் நன்கு பாராட்டிப் புகழ்ந்தார்கள்.

சேர். ஒலிவர் அவர்கள் பேசிய பொழுது இன்னும் மக்களிடையே இருந்து வரும் திருப்தியுணர்ச்சியும் தலைமைப்பேற்றுக்குறைவும் பரிதாபத்துக்குரியனவெனக் கூறினார். இந்த நாளில் ஒரு விசேஷ மகிழ்ச்சியுடனும் பாரிய பொறுப்புணர்ச்சியுடனும் அங்கு விஜயம் செய்திருப்பதாகவும் கடந்த மகா யுத்தம் நடந்த காலத்தில் தான் கடைசியாக அங்கு வந்து மக்களை வேண்டிக் கொண்டதன்படி அவர்கள் ஈட்டிய சேவைகளே வங்காளம், பர்மா, மலாயா முதலிய தேசங்களுக்கேற்பட்ட துன்பங்களைப் போன்றவற்றிலிருந்து இலங்கையை விடுவித்தன வென்றும் மேலும் கூறினார். அந்த நாட்களில் யாழ்ப்பாண மக்களும் இதர மக்களும் அளித்த சிநேகபான்மையான சேவைகளுக்கு நன்றி செலுத்தியபின் அவர் தொடர்ந்து பேசியதாவது:—

இன்று இலங்கையின் அநேக தலைவர்கள் தத்தம் நாற்காலிகளில் சௌகரியமாக அமர்ந்து கொண்டு தாம் மக்களின் நிலையையச் சீர்ப்படுத்துதற்கு ஒன்றுஞ் செய்யாமல் பிறர் செய்வனவற்றில் பிழைகண்டு பிடிப்பவர்களாகவேயிருக்கின்றார்கள். நான் உங்கள் சீவியத்தில் புதிய உணர்ச்சிகளைப் புகுத்துவதற்கே மீண்டும் உங்கள் மத்தியில் வந்துள்ளேன். எதிர் வரும் மாதங்களுக்குள் அல்லது வருடங்களுக்குள் உங்கள் நிலைமையை நன்னிலைப்படுத்த நீவிர் முயற்சியெடுக்காவிடின் மீண்டும் எக்காலத்தும் உங்களுக்குச் சந்தர்ப்பங்கிடைக்காது போகலாம். பிரதானமாக யாழ்ப்பாணத்துக்கு எவ்வகையான அரசாங்கம் பொருத்தமானதாகவிருக்கும் என்னும் கருத்தோ அல்லது வேறு அபிப்பிராயங்களோ நமது சத்துராதியல்லவென உங்களுக்குக் கூறியுள்ளேன். யாழ்ப்பாணத்திலும் இலங்கை முழுவதிலும் உள்ள தலைமைப் பேறுகள் இன்றைய சந்தர்ப்பத்தைப் பயன் படுத்தப் பிந்தினால் இன்று நம்மை அவமானத்துக்குட்படுத்தும் சத்துராதிகள் நாளை நம்மை நிர்மூலமாக்குபவனவாகவும் மாறக்கூடும். இத்தீவின் எந்த தனிப்பிரஜையின் உதவியும் துணையுமின்றிச் செய்துமுடிக்கவியலாத சேமிப்பு இயக்கம், கிராம அபிவிருத்தி அல்லது சமூக சீர்த்திருத்தம் போன்ற சேவைகளுக்காக ஒவ்வொருவரும் தம்மாலியன்ற அளவு சேவை செய்யவேண்டுமென வேண்டுவதற்காக நான் எல்லாப் பட்டிணங்களுக்கும் விஜயஞ் செய்வேன். முதலியார் தியாகராஜாவைப் போல் ஆயிரக்கணக்கான தியாகராஜாக்கள் இன்று இலங்கை முழுவதும் தேவைப் படுகின்றார்கள். பத்து அல்லது இருபது வருடங்களுக்கு முன்பெனில் அவர்களில் ஒருவருடன் திருப்தியடைந்திருக்கலாம். ஆனால் இன்றைய பிரச்னைகள் அதிகமாகிவிட்டபடியால் இலங்கை முழுவதும் மக்களது முன்னேற்றத்துக்காகப் பாடுபடும் பெருந் தியாகிகள் அத்தியாவசியமாகத் தேவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அதிக விலையில்லாத ரோனியோ டுப்ளிகேட்டர். சிறிய பாவனையாளர்களுக்கென விசேஷ விலைக்கு விற்பனை செய்யப்படுகிறது.

# 88

**88**ப் பற்றித்தப்பாக எண்ணி விடாதீர்கள்—டுப்ளிகேட்டர்களை இடை இடையே மட்டும் உபயோகிப்பவர்களுக்கென இவ்வளவு நியாயமான விலைக்கு விற்பனை செய்யப்பட்டபோதிலும், விலையுயர்ந்த மொடல்களின் நவீன அமைப்பும் உறுதியான வேலைப்பாடும் இதில் கைவிடப்படவில்லை. ரோனியோ எஞ்சினியர்கள் ஏனைய மொடல்களுக்கு அளிக்கும் அதே பராமரிப்பையும் கவனத்தையும் 88ம் பெற்றிருக்கிறது. மேலும் எல்லா நிலைமைகளிலும் கஷ்டமான சேவை செய்வதற்கு இது நல்லது.

- ஏராளமான தாள்களை தானே கொடுத்து இயக்கும் சக்தியுடையது.
- மிகவும் விரைவாக வேலை செய்யக் கூடியது.
- மையைப்பரப்புவதில் அரைக்கரைவாசி தானே இயங்குவது.
- ஐந்து வருடகால சேவைக்கு உத்தரவாதமளிக்கப்படுகிறது.

## டொட்வெல் அன் கோ., லிமிட்டெட்.

(இங்கிலாந்தில் இணைக்கப்பட்டது. அங்கத்தவர்களின் உத்தரவாதம் வரையறுக்கப்பட்டது.) காரியாலயத் தளவாடப்பகுதி.

18/20, ராணி வீதி, கோட்டை, கொழும்பு. ரெலிபோன் 2301.

பழுது பார்த்தலும் சேவையும்: 30, ஆஸ்பத்திரி வீதி, கொழும்பு ரெலிபோன் 3784.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய இலங்கை

## மக்களுக்காக மக்களின் ஆட்சி

(முன் தொடர்ச்சி)


### தேசிய வருமானம்:

இன்றைய இலங்கையின் பொருளாதாரம், வேறுபடாத விவசாய ஏற்றுமதிப் பொருளாதார மென்பது பிரசித்தமானதே. 1938-ம் ஆண்டில் முழுத் தேசிய வருமானம் தலைக்கு 105 ரூபா வகுக்கும். 1947-ம் ஆண்டில் வருடமொன்றுக்கு 282 ரூபாவாகும்.

இந்த உயர்ச்சி, மக்களின் பொருளாதார நிலைமையில் ஒரு அபிவிருத்தி ஏற்பட்டிருக்கிற தென்பதைக் குறிப்பதாக இல்லை; ஆனுல் யுத்த காலத்தில் ஏற்றுமதிப் பொருட்களினதும் இறக்குமதிப் பொருட்களினதும்விலைகள் உயர்ந்து கொண்டுபோன கிரமத்தைக் காட்டுகின்றது. **தென் கிழக்கு ஆசிய நாடுகளுடன் ஒப்பு நோக்கின் ஒரு இலங்கையரின் வருமானம், ஜப்பானியர் ஒருவரின் வருமானத்துக்கு மட்டுமே குறைந்தது. ஆனுல் பிலிப்பைன்ஸ், இந்தியா, பாகிஸ்தான், இந்தோனேஷியா, சீனு, மலாயா, பர்மா ஆகிய நாடுகளிலுள்ளவர்களின் வருமானத்தை விட அதிகமானது.** ஆசியா, தூர கிழக்கு நாடுகள் முதலியவற்றிற்கான ஐக்கிய நாடுகளின் பொருளாதாரக் கொமிஷனுல் நடத்தப்பட்ட பொருளாதாரக் கணக்கெடுப்பு இவ்வுண்மையை வற்புறுத்துவதோடு இலங்கை மக்களுக்கு மிகவும் உபயோகமான ஒப்பிட்டுப் பார்க்கக்கூடிய விபரங்களையும் கொடுக்கின்றது.

இந்த வருமானம் எப்படி சம்பாதிக்கப்படுகிறதென்பதைக் குறிப்பிடுவதும் அவசியமாகும். 1947-ம் ஆண்டில் தேயிலை, ரப்பர், தென்னை முதலியவற்ருல் 80 கோடியே 70 லட்சம் ரூபா கிடைத்தது. ஏற்றுமதி செய்யப்படாத பொருட்கள், சேவைகள் முதலியவற்ருல் 116 கோடியே 70 லட்சம் ரூபா கிடைத்தது. வருமான அதிகரிப்பு வீதத்தைவிட விலைகள் உயர்ந்ததனுல் யுத்தத்துக்கு முந்திய கணக்குகளிலும் இக்கணக்கு அதிகமாகக் காணப்படினும் சடசம்பந்தமான அளவுகளில் தேசீய வருமானம், 1938-ம் வருடத்தியதை விட உண்மையில் குறைவான தென்றே கூறவேண்டும்.

ஆகவே, இந்த வருமானத்தில் 63·4 சத வீதம் கைத்தொழில்களிலிருந்தும், 11.3 சத வீதம் வர்த்தகம், போக்குவரத்து முதலியவற்றிலிருந்தும் 3·3 சத வீதம், அரசாங்க சேவைகள் முதலியன வற்றிலிருந்தும் 1·8 சத வீதம் மீன் பிடித்தலிலிருந்தும் கிடைக்கின்றது என மதிப்பிடுவது சரியாகும். மூன்று பிரதான கைத்தொழில்களின் உற்பத்தி, விநியோகம், ஏற்றுமதி முதலியவற்றுடன் சம்பந்தப்பட்ட ஏனைய வர்த்தகங்களிலும் வியாபாரங்களிலும் தொழில் பார்ப்பவர்கள், இலங்கையில் தொழில் பார்ப்பவர்களில் மூன்றில் இரண்டு பகுதியினராவர். இலங்கையின் யுத்தகால நிலைமைகளால் ஏற்பட்ட தொழில்களைச் செய்ய கிராம மக்கள் நகரங்களில் பிரவேசித்தபோது இவ்வமைப்பு ஒரளவிற்கு சீர்குலைந்தது. இது இப்பொழுது மீண்டும் திருத்தப்பட்டுள்ளது. எனவே இலங்கையின் தொழில்




இலங்கையின் மொத்தத் தேசிய வருமானத்தை விளக்கும் படம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைப்பில் எவ்வித நிரந்தரமான மாற்றத்தையும் யுத்தம் ஏற்படுத்தி விடவில்லை.

தேசிய வருமானமே முதலாவதாகக் கவனிக்கப்படவேண்டியது. இலங்கையின் தேசிய வருமானம் 1944-ம் ஆண்டில் 184 கோடியே 20 லட்ச மெனவும், 1947-ம் ஆண்டில் 196 கோடியே 90 லட்சமெனவும் மதிப்பிடப்பட்டது. இவை நுட்பமான மதிப்பெடுப்புகளல்ல. குடிஜண மதிப்பெடுப்பின் அடிப்படையில் 1948-ம் ஆண்டினதும் 1949—50-ம் ஆண்டினதும் கணக்குகள் கீழே தரப்படுகின்றன:—

| | | 1948 | 1949–50 |
|---|---|---|---|
| | | 10 லட்ச ரூபாய்கள் | |
| 1. | இறக்குமதி செய்யப்பட்ட பொருட்கள் உபயோகிக்கப் படாத உள்ளூர் ஏற்றுமதிகள் | 917 | 880 |
| 2. | இலங்கையில் உபயோகிக்கப்பட்ட உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்டுகள் | 498 | 522 |
| 3. | வர்த்தகம் | 190 | 190 |
| 4. | போக்குவரத்து | 110 | 110 |
| 5. | உத்தியோகங்கள் | 31 | 31 |
| 6. | சொந்த, வீட்டு சேவைகள் | 50 | 50 |
| 7. | மூலதன அபிவிருத்தி | 120 | 190 |
| 8. | அரசாங்கம் | 272 | 289 |
| 9. | வெளி நாடுகளிலிருந்து கிடைக்கும் வருமானம் | 31 | 31 |
| 10. | அந்நிய நாட்டு இராணுவச் செலவு | 53 | 30 |
| 11. | மொத்தத் தேசிய வருமானம் | 2272 | 2323 |

நிகழும் வருடத்தில் செலவு செய்யப்படவிருக்கும் தொகைக்கு சமமாகவே உணவு, உடை முதல் உபயோகச் செலவின் கீழ் சேர்க்கப்பட்டுள்ளவையை விஷயங்களுக்கு அடுத்த வருடத்திலும் செலவு செய்யப்படுமென்பதை இக் கணக்குகள் காட்டுகின்றன. தனிப்பட்டவர்களால் செய்யப்படும் மூலதன வேலைகளின் செலவு, அதாவது, கட்டுமானங்கள், உபகரணங்கள் அல்லது தொழிற் சாலைகளும், மத்திய அரசாங்கத்தாலும் ஸ்தல ஸ்தாபனத்தாலும் செய்யப்படும் வகுக்கப்பட்ட மூலதன செலவும் புதிய வருடத்தில் 17 கோடியே 30 லட்சம் ரூபாயாக அதிகரிக்கும். கவனிக்கப்படவேண்டிய மிகவும் முக்கியமான செலவு, தனிப்பட்டவர்களினதும் அரசாங்கத்தினதும் மூலதன செலவு என்னும் தலைப்பின் கீழ் வருகின்றது. இதில்தான் தொழில்கள் வழங்கக்கூடிய விதமாக செலவு செய்யப்படுவதற்கு அரசாங்கம் தனது செல்வாக்கை மிகவும் சுலபமாகப் பிரயோகிக்க முடியும்.




அரசாங்கச் செலவுகள் எப்படிப் பிரிக்கப்பட்டிருக்கின்றன வென்பதை இப்படம் காட்டுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மொத்தத் தேசியச் செலவு

| | | 1948 | 1949-50 |
|---|---|---|---|
| | | 10 லட்ச ரூபாய்கள் | |
| 1. | இறக்குமதித் தீர்வைகள் உட்பட உணவு, போஜனத்துக்காக உபயோகிக்கப்படும் ஏனைய பொருட்கள் முதலியவற்றின் இறக்குமதியின் பெறுமதி | .... 929.... | 929 |
| 2. | விநியோகச் செலவுகள் | .... 150.... | 150 |
| 3. | போஜனத்துக்காக உபயோகிக்கப்படும் உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் | .... 556.... | 580 |
| 4. | சொந்த, வீட்டு சேவைகள் | .... 50.... | 50 |
| 5. | வீட்டு வசதி | .... 48.... | 60 |
| 6. | பொருட்கள் சேவைகள் முதலியவற்றிற்கான மத்திய அரசாங்கத்தினதும் ஸ்தல ஸ்தாபனத்தினதும் தற்போதைய செலவு | .... 397.... | 466 |
| 7. | வெளி நாடுகளுக்கு அனுப்பப்படும் பணம் | .... 70.... | 60 |
| 8. | இலங்கையில் வசிக்காதவர்களுக்குக் கொடுக்கப்படும் பங்குகளும் வட்டிகளும் | .... 80.... | 80 |
| 9. | இலங்கையின் மொத்த மூலதானம்— | | |


| | 1948 | 1949-50 |
|---|---|---|
| A. அரசாங்கம் | .... 80.... | 173 |
| B. தனிப்பட்டவர்கள் | ....100.... | 125 |
| | — | — |

| | | | |
|---|---|---|---|
| | | .... 180.... | 298 |
| 10. | வெளி நாடுகளுக்குக் கொடுக்க விருக்கும் கடன்களின் சுத்த அதிகரிப்பு | .... 35.... | 127 |
| 11. | இறக்குமதிக் கழிவும் கலால் தீர்வையும் | .... 223.... | 223 |
| 12. | மொத்தத் தேசியச் செலவு | ....2272.... | 2323 |

புதிய வரவு செலவுத் திட்டத்திலுள்ள பிரதான அம்சங்களுக்குச் சம்பந்தமான செலவுகள் பின்வருமாறு:—

| | | 1948 | 1949-50 |
|---|---|---|---|
| | | 10 லட்சம் ரூபாய்கள் | |
| 1. | தனிப்பட்டவர்களின் உபயோகம் | ....1,510(66·5%).... | 1,546(66·6%) |
| 2. | தனிப்பட்டவர்களின் மூலதனம் | .... 100( 4·4%).... | 125( 5·4%) |
| 3. | மத்திய அரசாங்கமும் ஸ்தல ஸ்தாபனமும் (தற்போதைய சேவைகள்) | .... 397(27·5%).... | 466(20·1%) |
| 4. | மத்திய அரசாங்கமும் ஸ்தல ஸ்தாபனமும்(மூலதனம்) | .... 80( 3·5%).... | 173( 7·4%) |
| 5. | செலவுகளுக்கென ஒதுக்கப்பட்டதில் பாக்கி | .... 185( 8·1%).... | 23( 0·5%) |

(தொடரும்)



## முதுதமிழ்ப் புலவர் மு. நல்லதம்பி காலமானர்.

யாழ்ப்பாணம், வட்டுக்கோட்டையைச் சேர்ந்த முது தமிழ்ப் புலவர் மு. நல்லதம்பி அவர்கள் 8-5-51-ல் திடீரெனக் காலமானர் என்ற செய்தியைக் கேட்டுக் கவலைகின்ருேம்.

புலவரவர்கள் கொழும்பு ஸாஹிராக் கல்லூரியில் தலைமைத் தமிழ்ப் பண்டிதராகப் பல வருடங்கள் கடமையாற்றியதோடு கொழும்பிலுள்ள பல தமிழர்கட்கும் தமிழ்க் கல்வியறிவூட்டி வந்தார். இவர் மாணவர்களுக்கு ஏற்ற சிறந்த பாடப் புத்தகங்களை எழுதியுள்ளார். சொற்பொலிவும், பொருட் செறிவுமுடைய பாடல்களை இயற்றுவதில் வல்லுநர்.

மரதன் அஞ்சல் ஓட்ட கவிதைப் போட்டியில் இவர் முதற் பரிசு பெற்ருர். சமீபத்தில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற தமிழ் விழாவில் "கண்ணீர் பெருக்கிய கலித் தொகை" என்னும் பொருள் பற்றி இவர் அரியதோர் சொற்பொழிவாற்றினர். இதுவே இவர் பகிரங்க மேடையில் நிகழ்த்திய கடைசிச் சொற்பொழிவாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேண்டியளவு அரிசியும் மாவும்

## வாழ்க்கைச் செலவு உப-கொமிட்டியின் பிரயாசையினால் ஏற்பட்ட முதலாவது பலன்.

கடந்த மாதம் 23-ந் திகதியிலிருந்து அரிசியும் மாவும் வேண்டியளவு விநியோகஞ் செய்யப்படுகின்றன.

இப்படி விநியோகஞ் செய்யப்படும் அரிசி அரசாங்கத்தின் உதவிப் பணத்தைப் பெற்ற விலையில் பங்கீடு செய்யப்படும் அரிசிக்குப் புறம்பானது. இதன் விலை கொழும்பில் கொத்து 68 சதத்துக்குக் குறைவாகவே இருக்கிறது. உள்ளூர்ப் பகுதிகளுக்கு அரிசியைக் கொண்டு செல்வதில் ஏற்படும் செலவைச் சரிகட்ட வேண்டியிருப்பதால் அங்கு இவ்விலை சற்று அதிகமாயிருக்கிறது.

வாழ்க்கைச் செலவுக் கொமிட்டி எடுத்துக்கொண்டுவரும் பெரும் பிரயாசைகளினால் ஏற்பட்டுள்ள முதலாவது பலன் இதுவேயாகும். இதைப் பின்பற்றி தேங்காய், தேயிலை, ஜவுளி ஆகிய துறைகளிலும் பாவனையாளர்கள் சலுகைகளை எதிர் பார்க்கலாம். இவை சம்பந்தமாக அரசாங்கம் நிலைமைகளை ஆராய்ந்து வருகிறது.

அரிசியும், மாவும் வேண்டியளவு கிடைக்குமென்பதை உணவு மந்திரி கௌரவ திரு. ஏ. ரத்நாயக அவர்கள் ஏப்ரல் மாதம் 19-ந் திகதி பத்திரிகை நிருபர்களுக்கு அளித்த பேட்டி யொன்றில் வெளியிட்டார். அப்பேட்டியில் அவர் கூறியதாவது:—"நாட்டின் உணவு நிலைமை இன்று ஊக்க மூட்டுவதாக இருக்கிற தென்பதை அறிவிக்கக் கூடியதாக இருப்பதையிட்டு நான் மிகவும் சந்தோஷப்படுகிறேன். போதியளவு அரிசி, மா, சீனி, கையிருப்பிலிருப்பதுடன், உத்தரவாத விலைத்திட்டத்தின்படி அரசாங்கத்தால் வாங்கப்படும் மக்காச் சோளம், குரக்கன் முதலியனவும் போதியளவு என் கைவசமிருக்கின்றன.

"அரிசி இறக்குமதிக்கென அரசாங்கம் மேற்கொண்டும் 800 லட்சம் ரூபா செலவு செய்ய இருக்கிறது. மொத்த அரிசிச் செலவு இப்பொழுது 3500 லட்ச ரூபாவாகிவிடும். ஒரு கொத்து அரிசியை 68 சதத்துக்குக் கிடைக்கும்படி செய்வது மூலம் வாழ்க்கைச் செலவில் 4 புள்ளிகள் குறையுமென்று கணக்கிடப்பட்டுள்ளது.

**"புதிய நடவடிக்கை அமுலுக்கு வருவதுடன் இறக்குமதி செய்யப்பட்ட அரிசி எடுத்துச் செல்லப்படுதல், விற்பனை செய் செய்யப்படுதல் சம்பந்தமான தடை உத்தரவு ரத்து செய்யப்படும். மா விற்பனவு, விநியோகம் சம்பந்தமான கட்டுப்பாடுகளும் நீக்கப்படும். இதனால் மொத்த வியாபாரிகள் மீண்டும் மா வியாபாரத்தில் இறங்கிவிடுவார்கள்.**

"புத்தாண்டு இலங்கை மக்களுக்கு நன்மையைக் கொண்டு வருமென்று கூறுவதற்கான சுபசகுணங்கள் அனைத்தும் காணப்படுகின்றன. எல்லோரும் எதிர்ப்பார்பதை விட அதிக சீக்கிரத்திலேயே அரசாங்கம் தற்போதைய கஷ்டங்களை சமாளித்து விடுமென்று நம்ப இடமிருக்கிறது."

நாட்டில் உற்பத்தியாகும் காய்கறிகள், தான்யங்கள் போன்ற எல்லா வகை உணவுப் பொருட்களை விற்பனவு வசதி இலாகா வாங்க ஒரு பெரிய திட்டமும், கொழும்பு, கண்டி, காலி போன்ற பெரிய நகரங்களில் குறைந்த விலைக்கு சாப்பாட்டுப் பொட்டணங்கள் கிடைக்கும்படி செய்ய ஒரு திட்டமும் தயாரிக்கப்பட விருக்கின்றன.

வர்த்தக மந்திரி காரியாலயத்தின் நிரந்தரக் காரியதரிசி திரு. எம். எப். டி. எஸ். ஜயரத்ன அவர்களும் விற்பனவு வசதி இலாகா கொமிஷனர் திரு. பி. எல். டபிள்யூ, பர்ணந்தோ அவர்களும், உள்நாட்டு மந்திரியும் வாழ்க்கைச் செலவு சம்பந்தமான மந்திரி சபையின் உப கமிட்டித் தலைவருமான சேர். ஒலிவர் குணதிலக அவர்களை ஏப்ரல் மாதம் 19-ந் திகதி காலை இவ்விஷயமாகக் கண்டு பேசினர்.

இம் மகாநாட்டில் செய்யப்பட்ட முடிவின்படி, உள்நாட்டில் உற்பத்தியாகும் உணவு தான்யங்கள், காய்கறிகள், வாழைப்பழம் போன்றவற்றை வாங்கிப் பல விடங்களிலும் விற்பனவு செய்ய நிலையங்களை ஏற்படுத்த விரிவான திட்டமொன்றை விற்பனவு வசதி இலாகா கொமிஷனர் தயாரிப்பார்.

---

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

பெற முயற்சி செய்ய முடியாத நிலைமையில் எகிப்தும் பாரசீகமும் தங்கள் தங்கள் உள்ளூர்ப் பிரச்னைகளைக் கவனித்துக் கொள்ளுவதிலேயே அதிக சுறுசுறுப்பாக இருந்தன. எனவே தலைமை தாங்குவதற்கு ஒருவருமில்லாமல் இஸ்லாத்தின் கலாசாரம் அழிந்தொழியு மென்ற அல்லது வேரோடு நாசமாகு மென்ற அபாயகரமான நிலைமையில் இருந்தது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இங்கினியாகலை-ஓர் பெருந் துணிகர முயற்சியின் பிறப்பிடம்.

## கல்லோயாப் பள்ளத்தாக்கில் இன்று கண்கவர் வனப்புடைத்தாய்த் திகழ்கின்றது.

இலங்கையின் கிழக்குக் கரையையடுத்து மனோவசீகர சக்தி நிறைந்ததாய் அசைவாட்டமின்றித் தூங்கிக் கிடக்கும் ஒருநதிப்பள்ளத்தாக்கு இன்று ஓர் பெரும் பரீட்சார்த்தத் திட்டத்துக்கு நிலைக்களனாக மாறியுள்ளது. 62 மைல் நிளமானதும் 700 சதுரமைல்களுக்குப் பரவிக்கிடப்பதுமான கல்லோயா என அழைக்கப்படும் நதியைக் கட்டுப்படுத்துவதற்கு திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. ஈரத்தன்மையற்றதாயுள்ள ஆனல் விவசாயத்துக்கு ஏற்ற 40 லட்சம் ஏக்கருக்கதிகமான உயர்ந்த மேட்டு நிலத்தை நன்னிலைப்படுத்தி விவசாயத்துக்கும் கைத்தொழிலுக்கும் ஏற்றதாகச் செய்வதே இதன் பிரதான நோக்கமாகும். அநேக சீர்திருத்த இலக்குகளுடன் ஸ்தாபிக்கப்பட்டுள்ள இச் காணிக் குடியேற்றத் திட்டமானது இதன் அளவு, நிர்வாக அமைப்பு ஆதிய அடிப்படையானவிடயங்களிலே இத்தீவில்



அம்பாரை பட்டினத்தின் தோற்றம். முன்புறத்தில் உள்ள தற்காலிக கட்டிடங்கள் காரியாலயங்களாகும். குடியிருப்பு வீடுகள் பின்னல் தூரத்தில் காணப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இற்றைவரை ஏற்படுத்தப்பட்ட எல்லாத் திட்டங்களிலும் முயற்சிகளிலும் முற்றிலும் வேறுபட்டதாயுள்ளது.


இத்திட்டத்தையிட்ட ஆராய்ச்சிகளும் நில அளவை வேலைகளும் பல வருடங்களுக்கு முன்பே மேற்கொள்ளப்பட்டன. தேசத்தின் உணவைப் பாதிக்கக்கூடியனவும் கமக்காரனைத் தோற்கடிப்பனவுமாகிய வெள்ளம், வரட்சியெனும் உடன் பிறந்த பகைவருக்கு இப்பகுதியில் எவ்வளவு ஆதிக்கம் உண்டென்பது நீண்டகாலமாக ஆராயப்பட்டு வந்தது. யுத்தத்துக்குப் பிந்திய சுதந்திர மன வெழுச்சியில் இந்த முயற்சி விளையத்தொடங்கி இன்று இத்தீவின் பொதுமனிதன் ஒவ்வொருவனையும் பொருளாதார சுதந்திரத்தின் பயனை அனுபவிக்கச் செய்யும் ஓர் தகுந்த நீண்டகாலத்திட்டமாக மாறியுள்ளது. இதற்கு இலங்கையன்னையிடம் இயற்கையாகவுள்ள விவசாயத்துக்கேற்ற நிலைமைகள் உற்சாகமளித்து வருகின்றன. முன்னெக்காலத்தும் இப்பகுதியில் கிடைக்காதிருந்த மட்டற்ற சௌகரியங்களும், வசதிகளும் நம் சுதந்திர அரசாங்கத்தால் அளிக்கப்பட்டு வருகின்றன.

பூர்வாங்கப் பரிசிலனைகள், பரீட்சார்த்த முறைகள் ஆதியவற்றைத் தழுவி 1949-ம் ஆண்டில் இந்த முயற்சி தொடங்கப்பட்டது. கடற்கரையிலிருந்து 27 மைல் தூரத்தில் அடர்ந்த காட்டின் மத்தியில் தண்ணீர், சாக்கடை மின்சார வெளிச்சம் என்பவற்றுடன் கூடியதாக நன்கு நிர்மாணிக்கப்பட்டுள்ள இங்கினியாகலை எனப்படும் கிராமம் கண்டோர் மனதைக் கவர்வதாயுள்ளது. உள் நாட்டில் திரட்டப்பட்ட தேர்ச்சி பெற்றோரும், பெருதோருமாகிய தொழிலாளருடன் அமெரிக்க வேலையாட்களும், இயந்திர நிபுணர்களும், தொழில் விற்பன்னர்களும், அங்கு போய்ச் சேர்ந்துள்ளனர். மண்டி எண்ணெயால் இயங்கும் இயந்திரக் கலப்பைகளும், மட்டமாக்கும் இயந்திரங்களும் சேறுவாரி இயந்திரங்களும் நிலத்தை தோண்டுவதிலும் மண்ணை அகற்றுவதிலும் முனைந்து நிற்கின்றன.

"பார் முழுதும் ஏர் முனையிலே" என்ற உண்மையை நிரூபிக்கும் உற்சாகத்துடன் நம் இலங்கைத் தொழிலாளர் வேலை செய்வதைப் பார்க்குந்தோறும் மகிழ்ச்சியுண்டாகிறது. துளையிடும் கருவிகளும், கல் நொருக்கும் இயந்திரங்களும், கலவை இயந்திரங்களும் ஒரே இரைச்சலுடன் செங்குத்து மலைகளிலும் இருண்ட சுரங்கங்களிலும் வேலை செய்த வண்ணமிருக்கின்றன. தற்கால நாகரீகத்திற்கேற்றவாறு புதிய புதிய வேலைகளை ஸ்தாபித்து நடத்துவதில் ஆற்றல் மிக்க அறிவுடைய அனுபவசாலிகள் இயந்திரங்களை இயக்கி வருகின்றனர். சாதாரண மனிதன் வருடக்கணக்காகச் செய்யவேண்டிய வேலைகள் அவனது கண்காணிப்பில் நாட்கணக்கில் முடிவெய்துகின்றன. தற்பொழுது வீணே வெள்ளமாக ஓடும் கல்ஓயா நீரைத் தேக்குவதற்கு ஒரு அணையைக் கட்டியெழுப்பி இந்நதியை நமது அணைக்குட்படுத்துவதற்குத்தீவிர முயற்சியெடுக்கப்பட்டு வருகிறது.

ஆதிகாலந்தொட்டு இலங்கையில் இத்தகைய அணைகளைக்கட்டியெழுப்புதல் வழமையிலிருந்து வந்ததேயெனினும், இன்று நம் அரசாங்கம் மேற்கொண்டுள்ள கல்ஓயா அணைத்திட்டம் நீண்டகாலம் இலங்கைச் சரித்திரத்தில் அழியா இடம் பெறும் என்பதில் சந்தேகமில்லை.

அழகான வீதிகள் அங்குமிங்கும் திறக்கப்படுகின்றன. இலங்கைப் பெண்மணிகள் யாவரும் மெச்சத்தக்க வகையில் மின்சார அடுப்புகள், விசிறிகள் போன்ற பலவற்றைக் கொண்ட வீடுகள் அங்குமிங்கும் எழும்பிக் கொண்டிருக்கின்றன. காடடர்ந்தபிரதேசங்களில் வெயில், மழை, கொசு என்பவற்றின் ஆதிக்கத்தில் வாடி வதங்கிய நாட்டு மக்களுக்கு சிறு சிறு கல் வீடுகள் அமைக்கப்படுகின்றன. ஆஸ்பத்திரிகள், பாடசாலைகள், சமூக சீர்திருத்த



**திரு. ஜயவீர குருப்பு**


சென்ற மாதம் பலாங்கொடை தொகுதியில் நடைபெற்ற உப-தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி அபேட்சகர் திரு. ஜயவீர குருப்பு 8725 வாக்குகள் மேலதிகமாகப் பெற்று தெரிவு செய்யப்பட்டார்.


நிலையங்கள் முதலியனவும் ஆங்காங்கு தோன்றியவண்ணமாக விருக்கின்றன.

கல்லோயா அபிவிருத்திச்சபை தனது வேலையைத் திறம்படச் செய்கிறது. காரியாலயங்கள் பல திறக்கப்பட்டுள்ளன. மக்களுக்குக் காணி வழங்குதல், வீடு கட்டிக் கொடுத்தல் முதலிய வேலைகள் பலவற்றை இது மேற்கொண்டுள்ளது. 1951-ம் ஆண்டின் நடுப்பகுதியில் ஏறக்குறைய 300 விவசாயிகளுக்கு வீடுகள் கொடுக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. இத்தொகை வருடாவருடம் கூடிக்கொண்டு போவதுடன் தொழிலின்றி வாடும் மக்களின் ஜீவாதாரமாக இப்பிரதேசம் காலகதியில் மாறும் என்பது நிச்சயம்.

மலேரியா முதலிய நோய்களுக்குப் பயந்து இப்பிரதேசத்துக்குச் செல்லத் தயங்கும் மக்கள் நாளடைவில் நானோ நீயோவென்று போட்டி போட்டுக் கொண்டு இங்கு குடியேறுவார்களென்பதைக் கல்லோயாப் பிரதேசத்தின் இன்றைய நிலை மிகத்தெளிவாகக்காட்டுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஏனென்றால்! இலங்கை சிகரெட் எவ்வளவு நல்லதென்பதை அவர்கள் கண்டுபிடித்தபடியாலே. முதல் இலை இருக்கிறது--இத்தீவில் சாகுபடி செய்யப்பட்டு, நிபுணர்களின் மேற்பார்வையின் கீழ் பக்குவமாக விளைந்தபின் நன்கு பதம் செய்யப்பட்டு மிகவும் பிடிமானமான சுகாதாரத் திட்டத்தின்கீழ் கட்டுப்படுத்தப்பட்டு உற்பத்தி செய்யப்பட்டது. இதன் பயனாக மிச்சம் சுவையான சிகரெட், ஒரே தன்மையாக உங்களையும் உங்கள் நண்பர்களையும் மகிழ்விக்கும்.

1836

இலங்கையில் தயாரிக்கப்படும் சிகரெட்டுகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Appropriate Te
121, POINT-
NALLUR,
No.
ROAD




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வசம்பூரண சேவைக்கு

- விவசாய திருக்றர்களும் உபகரணங்களும்
- கட்டட, தோட்ட பொருட்கள்
- தரகர்களும் ஏலதாரர்களும்
- இறக்குமதியாளர்களும் ஏற்றுமதியாளர்களும்
- தோட்ட நிர்வாகம்
- இன்ஷூரன்ஸ்—எல்லா வகுப்புகளும்

## டி. சொய்ஸா அன் கோ. லிமிட்டெட்

1, யூனியன் பிளேஸ்,
கொழும்பு.

ரெலிபோன்: 2254, 2255
தந்தி: DESO.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழகி டி. ஆர். ராஜகுமாரி ஏன் சருமத்தை அழகுபடுத்த லக்ஸ் டாய்லட் சோப்பை நம்புகிறூர் என்பதை

## தெரிந்துகொள்ளுங்கள்




அவர் கூறுவதாவது: "பிரதி தினமும் லக்ஸ் டாய்லட் சோப்பின் எளிய பராமரிப்புதான் என் சருமத்தை மிருது வாகவும் அழகுடைய தாகவும் இருக்கச் செய்கிறது. நீங்களே அதை செய்துபாருங் கள். லக்ஸ் டாய்லட் சோப்பின் பரிமளம் மிகவும் சிறந்ததும் மலர்ச்சிதருவதும் கூட என்பதை நீங்கள் தெரிந்து கொள்வீர் கள்."

இனிய மணத்துடன் கூடிய இந்த வெண்மையானதும் சுத்தமானதுமான சோப் உங்கள் சருமத்தையும் வசீகரமாக செய்யும்!

சினிமா நட்சத்திரங்களின் அழகு தரும் சோப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாங்குவதற்கு சிறந்தது

# பிளாட்டிக்னம்

இங்கிலாந்தில் தயாரிக்கப்பட்ட

## "போல் பொயின்ட்"

புதிய பிளாட்டிக்னம் "போல் பொய்ண்ட்டர்," அதனை எல்லா போட்டியிலிருந்தும் தலை சிறந்ததாகச் செய்யும் ஒரு அம்சத்துடன் அழகுவாய்ந்ததும், நம்பிக்கையுள்ளதுமாகும். அது சாதாரண பேனைகளைவிட இரண்டுமடங்கு மை கொள்ளக்கூடியதாக இருக்கிறது. இலேசாக இணைக்கக்கூடிய மாற்றுமை நிரப்பிகளையுடைதாய் எழுதத்தயராயிருக்கும் எழுத்து உபகரணம் ஒரு சிறந்த உற்பத்திப் பொருளாகும். இதை உற்பத்தி செய்ய இதற்குமுன் பலர் பிரயத்தனம் செய்தபோதிலும் பிளாட்டிக்னத்தால் மட்டுமே பூர்த்தி செய்யப்பட்ட இதற்கு, "போல் பொய்ண்ட்டர்" மார்க்கட்டில் திறமையிலும், பெறுமதியிலும் இணை வேறெதுவுமில்லை,

Appropriate Technology Services
121, POINT-PEDRO ROAD
NALLUR, JAFFNA
No.



வேறு எந்த "போல பொய்ண்ட்டரை"யும் விட இரண்டுமடங்கு பெரியநிரப்பிகளை புறம்பாக வாங்கி (ஒன்று 90 சதம்) நீங்களே ஒரு நிமிஷநேரத்தில் இணைத்து விடலாம்.

## விலை

## ரூ. 3/-

விவரங்கட்கு: தனிவிநியோகஸ்தர்கள்

## மலர் பிப்ஸ் ஏசியா லிமிட்டெட்,

யோக்வீதி, கொழும்பு

*Printed at the Daily News Press, Lake House, McCallum Road, Colombo, by Spencer Ernest Toussaint, for the Department of Information, Colombo, Ceylon—1951*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org